1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 25-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு ஆடிமாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## முற்றிப்பழுத்த மொழிநிபுணர்

சுவாமி. ஞானப்பிரகாசர்

ஞானப்பிரகாசர் தம்பள்ளிப் பருவத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம்பற்றி எழுதுகிறார்: "எடுத்தவுடனே பாட்டுஇயற்றுகிற வழக்கம் தீங்குள்ளது என்றதை ஒருநாள் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரும் நன்றாய்க் கையிலும்மனதிலும்பதிய எனக்குப் படிப்பித்தார். அக்காலம் வட்டுக்கோட்டையில் கல்லூரியில் உபதலைவராயிருந்தவர் மானிப்பாயில் என்னோடுகூட ஒருவகுப்பில் படித்தவர். இவரும்நானும் சிலநாள் சிநேகிதராய் இருந்தோம். பின் 'கடுஞ் சிநேகம் பகைகாட்ட' அவர்என்னைப் பேசிப்போட்டார். நான் வகுப்பிலிருந்துகொண்டுதானே அவரது செயலைக் கண்டித்து ஒரு பாட்டெழுதி நீட்டினேன். அவர் கோபித்துக்கொண்டு எங்களைப் படிப்பித்துக்கொண்டிருந்த மாரிமுத்து உபாத்தியாயரிடம் அதைக்கொடுக்க, அவர் "வகுப்புநேரம் செய்கிற வேலை இதுதானாஎன்று மிகச் சினந்து கையைநீட்டச்சொல்லிப் பிரம்பினால் ஒரு அடி தந்தார். அவ்வடி எனதுவிசித்திர வேலைப்பாடுள்ள மோதிரம் தெறித்துப்போகச் செய்துவிட்டது."

இந்த அடிக்குப்பிறகு சுவாமிகள், கவிதை எழுதுவதை அடியோடு விட்டிருக்க வேண்டும். அது ஒருவகையில் நன்மையாகவே முடிந்தது. கவிதைக் கனவுலகில் உயரப்பறப்பதை விட்டு ஆராய்ச்சித்துறையில் அடித்தளஞ்சென்று ஆக்க வேலைசெய்ய அன்று ஆசிரியர் அடித்த அடியல்லவா அடிஎடுத்துக் கொடுத்திருக்கிறது?

சுவாமிகள் தம் இளமைப்பருவத்தின் ஒருசிலசம்பவங்களையே குறிப்பிடுகின்றார். உருசிகரமான சம்பவங்கள்; நகைச்சுவை கலந்து வர்ணிக்கிறார். அவற்றைப்படிக்கும்போது ஒருஏக்கம் தோன்றும். அவர் தம்சரிதையை ஏனோ விரிவாக எழுதவில்லை என்றஏக்கம். தமிழ்த் தாத்தா சுவாமிநாத ஐயரைப் போலச் சொற்கலைப்புலவர் ஒரு சுயசரிதை வழங்கவில்லையே என்ற வருத்தம்.

43 ஆண்டுகளாக, யாழ்ப்பாணத்துநல்லூரிலே குருத்துவத் திருத்தொண்டுசெய்தனர். அதனால் நல்லூர் ஞானப்பிரகாசர் என்று அறியப்பட்டார். ஏழை எளியவரிடையே வாழ்ந்தார். முக்கியமாக அவருடைய முன்மாதிரிகையால் 5,000மேற்பட்டவர்களைத் திருமறையில் சேர்த்தனர். கோவில்களைக் கட்டினார். தம் ஞானப்பிள்ளைகளுக்கு உடையுணவுத் தேவைகளை அளித்தார். கல்வி அறிவூட்டினார். அவர்களை வேதநெறியில் வளர்த்தார். திறமையான வேதபோதகர்என மதிக்கப்பெற்றார்.

தேவஊழியர் ஞானப்பிரகாசர் மாபெரும் எழுத்தாளர்; சரித்திராசிரியர்; பன்மொழிப் புலவர்; முற்றிப்பழுத்த மொழிநிபுணர். சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இத்தலி, பிரஞ்சுமுதலிய 18 மொழிகளை எழுதவும்பேசவும் ஆற்றல் பெற்றிருந்தார். சமஸ்கிருதமூலம் பிறஆரியமொழிகளை அறிமுகமாக்கிக்கொண்டார். சிங்களத்தின்வழி பாலியமொழியையும், தீபெத், பர்மிய, கூர்க்க மொழிகளையும் தெரிந்தனர். அவர் அறிந்த பிறமொழிகள் இலத்தீன், கிரேக்கம், போர்த்துக்கீஸ், டச்சு, ஜேர்மன். மொத்தத்தில் 70 மொழிகளை அறிந்திருந்தார் என்பர்.

ஒருமுறை ஜேர்மன் அரசாங்கத்தார் அவரது ஞாபகார்த்தமாக அவரது படிவம்தாங்கிய தபால்முத்திரை வெளியிட்டு அவரைப் பெருமைப்படுத்தினர்கள். இலங்கை அரசியலாரும் அவரை நன்கு கௌரவித்தார்கள். சரித்திரக் கையெழுத்துப் பிரதிகள்குழுவில் அவரை அங்கத்தினராக இலங்கை அரசாங்கம் நியமித்தது.

மொழிஆக்கத்துறையில் அவரது தனிப்பெரும்சாதனை அவர் அமைத்துத்தந்த சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ்அகராதி. சுவாமிகளுக்குமுன்பு அத்துறையில் நாட்டஞ் செலுத்தியவர் மிகச் சிலர். தமிழ் லெக்ஸிகன் சென்னை, பல்கலைக்கழக அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது. அதிலுங்கூடச்சொற்பிறப்புக் காட்டப்படவில்லை. அதனைத்தொகுத்த அறிஞர்கள் 'மொழிப்பொருள் காரணம் விழிப்பத்தோன்றா' என்ற தொல்காப்பிய சூத்திரத்தைத் தமக்குஆதாரமாகக் காட்டியும், தமிழ்மொழிநூல் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறதென்பதாகக்காட்டியும் சொற்களுக்குக் காரணங் காட்டினாரில்லை. பேச்சுவழக்கில்உள்ள சொற்களைஎல்லாம் சேர்த்ததில் குறைவில்லை. அதற்காகப் பொருந்தாப் பொருள்உரைக்க வேண்டுமோ? தமிழர்என்ற சொல்லுக்குப் பொருள்தரும் முறையைப்பாருங்கள். "தமிழர் n<E tumbler drinking Cup, விளிம்பில்லாத பாத்திரம்" எப்படி இருக்கிறது பொருள்? பாத்திரத்தைக்குறிக்கப் பேச்சுவழக்கில் டம்ளர் தம்ளர் என்கிறோம். என்றாலுந்தான் என்ன? இதற்காகவா உணர்வுநிறைந்த நல்ல தமிழரை விளிம்பில்லாத தீர்த்த பாத்திரம் ஆக்கவேண்டும்! இந்த அகராதிக்கு 4,10,000 ரூபாசெலவு! 27 ஆண்டு பெரும் உழைப்பு!

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## கம்யூனிஸம் சொல்வதென்ன?

(சென்றவாரத் தொடர்ச்சி)

கம்யூனிஸம்தேடும் குழப்பம் இல்லாமல் சோஷலிசத்தை நாட்டமுடியாது, எல்லாமேம்பாடும், முன்னேற்றமும் வகுப்புவாரிச்சண்டையிலிருந்தே பிறக்கும்; சண்டையில் தர்மம்அதர்மம் என்பதுண்டா? சண்டையில் எதிரியை எவ்விதத்தில் ஏமாற்றலாம்? என்னதந்திரத்தினால் அவன்படையில் நுழையலாம்? வெற்றிபெறப் பலாத்காரம்அவசியமா? கொலைஅவசியமா? அவசியம்என்றால் எதுவும்அவர்களுக்கு அதர்மம்இல்லையே. கம்யூனிஸத்தை நாட்ட இவைகள்எல்லாம்தேவை. ஒழுக்கமும்தர்மமும் இவர்கள் மத்தியிலோ, புத்தியிலோ உண்டா சொல்லுங்கள். அவர்கள் சொன்னபிரகாரம் ஒரு செயலைத்தொடங்குமுன் கம்யூனிஸ்தன் கேட்கவேண்டியது: சமூகச் சண்டைக்கு இது உதவுமா, உதவாதா? சமூகசச்சரவைத் துவக்கவும் வளர்க்கவும் உதவுவதெல்லாம் கம்யூனிஸத்திற்குத்தர்மம். உதவாதவைகள் அதர்மம். இதைக்கண்டுபிடிக்கும் எந்த யோக்கியமுள்ளமனிதன் கம்யூனிஸப் பேயின்கையில் விழச்சம் மதிப்பான்?

கம்யூனிஸத்தின் இந்தநூதன அயோக்கிய தர்மசட்டத்தைக் கண்டுபிடித்தால், அவர்கள் சமயத்துக்குச்சமயம் அடிக்கும் பல்டியைக் கண்டுபிடிக்கமுடியும். வகுப்புவாதச்சண்டையை வளர்க்க எச்சமயத்தில் எவன் காலைப் பிடிக்கவேண்டுமோ, எக்கட்சிக்குக் காவடி தூக்கவேண்டுமோ அவன் காலைப்பிடிப்பார்கள். அவன்கட்சிக்குக் காவடி எடுப்பார்கள். போனமாதம் அவர்களுக்கு விரோதமாய் இருந்து சுந்தரம் அவர்களைச் சுட்டுத் தள்ளினானே; அவன் தயவு இப்பொழுது வேண்டும். அவனைத் தலைமேல் வைத்துத் "தலைவன் தலைவன் என்று இன்று ஆடுவார்கள்." காரியம் ஆகும்வரை — தங்கள் கை வலுத்துவிட்டதென்று கண்டவுடனே அக்கட்சியை உதறித் தள்ளிவிடுவார்கள்; உதறித் தள்ளிவிடுவதோடு மட்டுமா? கொலை எல்லாம்தான் அவர்களுக்கு ஒரு பொருட்டல்லவே.

அவர்களுக்குக் கிறீஸ்தவம் என்றால் கட்டோடு பிடிக்காது. ஆகிலும் ஸ்பானிய தேசத்தை அவர்கள் நாசமாக்கத் தேடிய போது, இங்கிலாந்துதேசத்தில் (கத்தோலிக்கருக்கு விரோதமான) புரொட்டஸ்தாந்தரைக் காக்காய்பிடித்துத் தங்கள் கூட்டத்தில் வந்து பேசச்செய்தார்கள். 1947-இல் ஹங்கேரிதேசத்தை அடக்கத் தேடினார்கள். அதற்குக் கிராமவாசிகளின் எதிர்ப்பை ஒழிக்கவேண்டும். கிராமவாசிகள் கத்தோலிக்கர். என்ன செய்தது இந்தக் கம்யூனிஸப் பச்சோந்தி? வாரம் ஒருநாள் தொழிலாளர்களை அனுப்பி, இடிந்த மாதாக்கோவில்களைப் பழுதுபார்க்கச் செய்தது. கம்யூனிஸம் சாதுவானது (பசுத்தோலைப் போர்த்திய புலியல்ல); மதத்தை ஆதரிக்கிறார்கள் என்று மயங்கிவிட்டனர்; பழுதுபார்த்து முடிந்தபின்னர் கம்யூனிஸக் கட்சித் தலைவர்களுக்குக் கோவிலிலேயே மாலை போட்டுத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டனர். கம்யூனிஸம் அதிகாரப்பீடம் ஏறியது. மக்கள் மதச்சுதந்தரமும் மலையேறியது. இரண்டொரு மாதத்தில் மதப்போரும், கொலையும் கூத்தாடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவாக்கு - திருவாக்கு

பீற்றரின் குடும்பம் என்றும்போலவே சீரும்சிறப்பும ஒருங்கே அமைந்து, ஏனையோர்பார்த்துப் பொறுமைகொள்ளும்படி வளம்பெற்றிருந்தது. பீற்றரின் வாழ்க்கைத்துணைவியான மேரி "நாமெல்லோரும் வாழப்பிறந்தோம்; வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு, எல்லோராலும் வரவேற்கக் கூடிய முறையில் இல்லறவாழ்க்கையை இனிதேநடாத்திவந்தாள்.

பக்கத்துக்கிராமத்தில் லூர்துநாயகி கோவில். அங்கேதான் மேரியின்ஓய்வு காலம் இன்பமாகக்கழியும். தன்வீட்டு வேலைகள் எப்போது முடிவடையும் என்று எதிர்பார்த்தவண்ணமாகத் தன் வீட்டுவேலைகளைச் செய்துமுடிப்பாள். "தொட்டிலில்கட்டிய பசுக்கன்றை அவிழ்த்துவிட்டதும் துள்ளிக்குதித்து அம்மா! என்று கத்திக்கொண்டு ஓடத்தானேசெய்கிறது!" அதுபோலவே மேரியும் தன்வேலைகள்முடிந்ததும் லூர்துநாயகிகோவிலுக்குச் சென்றுவிடுவாள்.

அங்கே செபம்முடிந்ததும் முகத்தில் சாந்தம்தவழ முழந்தாளில் எழுந்துநின்று இரக்கமசொட்டும்படியாகக் கைகூப்பி, லூர்துநாயகியின் திருச்சுரூபத்தைப்பார்த்து இரந்து, "தாயே! நான்மற்றவர்களைவிட ஓர் உயர்ந்த பணக்காரியாகவேண்டும்; வானளாவிய மாளிகையிலே ஒய்யாரமாக மேல்மாடியில்உலாவக் கருணைபுரியவேண்டும்; தங்கங்களும், வைடூரியங்களும், புஷ்பராகங்களும், மாணிக்கங்களும் எனதுமார்பில் பிரகாசிக்கவேண்டும்; ஆடம்பரமாக வாழவேண்டும்; இரக்கம்காட்ட மாட்டாயா தாயே என்றுகேட்பாள்?" இல்லை.

பரலோகஇராக்கினியே, நான்கேட்பது பொன்னும் பொருளுமல்ல; புகழும் பெருமையுமல்ல; எனக்குவேண்டியது கொஞ்சிக்குலாவ ஓர்குழந்தை; அதுவே போதுமானது; என் மீது கருணைகாட்ட மாட்டாயா? நான் அப்படித்தான் என்னதவறு இழைத்துவிட்டேன்? மாதா! மாதா! என்று பக்தியோடுபூசிப்பது தவறு? உன்னைத் தஞ்சமென்று உன்காலடியில் மண்டியிட்டுக்கிடக்கின்றேனே! அதுதான் தவறு? எனக்குக்கலியாணமாகி ஐந்து ஆண்டுகளாகின்றன; இப்படிஎன்றும் தனிமையாகக் காலம்கழிக்க வேண்டுமென்று அப்போதேதெரிந்திருந்தால், இந்தமாதாமுன்னிலையில் கைப்பிடி நடந்திருக்காதே; நான் கலியாணம் செய்யச் சம்மதித்திருக்கவும் மாட்டேனே; நான் என்றும்கன்னியாகவே காலம்கழித்திருப்பேனே; என்னைப்போன்றுதானே நீயும்ஓர்பெண்; ஏன் என்மீது இரக்கம்காட்டத் தயங்குகிறாய்? தாயே! என்று இப்படியாக வழக்கம்போல மளமளவென்று கேட்பாள்மேரி. பின் செபம்முடிந்ததும் வீட்டிற்குப் போய்விடுவாள்.

இப்படியாகச் சிலவருஷங்கள் உருண்டோடின. மேரி ஓர்அழகிய குழந்தையைப்பெற்றாள். பீற்றரும் மேரியும் அளவிலாமகிழ்ச்சி கொண்டனர். அதுவும் ஆண்குழந்தையென்றால் மேரியின்குதூகலத்தைப்பற்றிச் சொல்லவாவேண்டும்? குழந்தைக்குப் பிலிப்ஸ்என்ற பெயர்சூட்டிச் சுகமே வாழ்ந்தார்கள்.

நான்கேட்டதை மாதா கொடுத்துவிட்டாள்; இனிநான் ஏன்கோவிலுக்குப் போகவேண்டுமென்று அவள் இறுமாப்புக்கொள்ளவில்லை. மேரியும் மகனும் தவறாது கோவிலுக்குப் போவார்கள். பால்மணம்மாறாத பச்சிளங்குழந்தை மாதாவே! என்று பணிவுடன்அழைப்பான். அப்போது மேரி தன்னையே மறந்துவிடுவாள். தாயே! நீஎப்போதும் கல்லாகவே இருக்கிறாயே; என்னுடன் பேசுகிறாயில்லையே; விளையாடவருகிறாயில்லையே; நீஎப்படி ஆடஅசையமுடியும்? தாயேஎன்கிறார்கள்; உன்னுடன் ஏதேதோவெல்லாம் பேசுகிறார்கள் வெறும்மோடர்கள்என்று கம்யூனிஸ்தவாதிபோலப் பேசுவான். பாவம், சிறுவன்தானே! அவனுக்கு லூர்துநாயகியின் மகிமைதெரியுமா? அன்றி அந்நாயகி யார்என்பதுதான் தெரியுமா?

சிறுவன் இன்று பெரியவனாகிறான்; பலஇன்னல் இடுக்கண்களுக்கிடையிலும், நெருங்கிவரும் சூறாவளிகளுக்கிடையிலும் தன்மகன் படிக்கத்தான் வேண்டும்; பட்டதாரியாகவேண்டும்; உத்தியோகம் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மகனைப்படிக்கவைத்தாள்மேரி. அவனும் கலாசாலை வெறும் சொர்க்கலோகமென் றெண்ணாது, கவனமாகப்படித்து ஒருவாறு எஸ். எஸ். சி. பரீட்சையில் தேறிவிட்டான். அதற்குமேல் படிப்பதற்கு அதிகபணம் வேண்டுமல்லவா?

கலாசாலைப்படிப்பைக் கருத்தாய் முடித்துவிட்டுச் சிலகாலமாகத் தாய்தந்தையர்களுடனேயே வாழ்ந்தான் பிலிப்ஸ். கூண்டிலிருக்கும் குஞ்சுக்கிளிக்குத் தாய் இரைகொடுக்க மறந்துவிடுமா? வறுமையும்துன்பமும் அவர்களை வாட்டிவதைத்தன. எனவே, எங்காவது வேலைதேடுவோமென்று தோன்றிற்று. இருபத்தொருவயசு நிரம்பாதஇளங்காளை — வசீகரதோற்றம் அத்தனையும் ஒருங்கேஅமையப் பெற்ற அந்தஇளம்வாலிபன் பிலிப்ஸ்

**பே. எற்வேட் — மட்டுவில் வடக்கு**

தன்தாயிடம்சென்று விடைகேட்டான். தாயின்வயிற்றைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் குரங்குக் குட்டியைப்பார்த்துத் தாய்க்குரங்கு பாரந்தாங்க முடியாதென்று சினக்குமா? அதுபோலவே, மேரியும் மறுத்தாள். எனினும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு விடைகொடுத்து, "நாமும் வாழத்தானே வேண்டும்; நீ ஒருபோதும் மாதாவை மறந்துவிடாதே; மாதாஉனக்கு வழிகாட்டுவா" என்று மகனின்தோளைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டே விடைகொடுத்தாள் மேரி. அப்போதுபிலிப்ஸ் அணிந்திருந்தசட்டையில் மளமளவென்று பலசொட்டுக்கண்ணீர் சிந்தியது.

"அம்மா, ஏனம்மா அழுகிறாய்? நீ துக்கப்படுவாயானால், எனக்குஎங்கும் 'நோ வேக்கன்சி'என்றுதான் கூறுவார்கள்; என்படிப்பை நிரூபிக்க அத்தாட்சிப்பத்திரங்கள் இருக்கின்றன; என்னை நல்லவனென்று நிரூபிக்கச் சுவாமியாரின் நற்சாட்சிப்பத்திரங்கள் இருக்கின்றன; துணைக்கு மாதாஇருக்கும்போது வேலை கிடைக்காமலாவிடும்?" என்று பிலிப்ஸ் கூறிவிட்டு மாதாகோவிலுக்குச் சென்றான், மன்றாடினான், தாய்தந்தையர்க்குப் பயணம் கூறினான், புறப்பட்டுப்போனான் வேலைதேடி.

பிலிப்ஸ் கொழும்புக்குச்சென்றான். பலஇடங்கட்குஞ்சென்று வேலைகேட்டான். எங்கும் வேலைகாலியாய்இல்லையென்றார்கள். எங்கேபோனாலும் வேலைஇல்லை. பாவம், கஷ்டம்இன்னதென்று அறியாதவன். நெற்றிவியர்வை நிலத்தில்சிந்த உழைத்துப் பழக்கமில்லாதவன். வாழ்க்கையின் முதற்படியில்கூட ஏறாதவன். எங்கும் மனம்செல்லவில்லை.

புதுமெருகு குலையாத மோட்டர்கார்கள். அவற்றுள் உல்லாசச்சீமான்கள். மறுபக்கம், மாட்டுக்குப்பதில் மனிதன் எனும்பொதிய றிச்சோவண்டி இழுக்கிறான். இவைகளைப்பார்த்து

(தொடர்ச்சி [illegible])

## சுதேச வர்த்தமானம்

### செனற்சபைத் தலைவர்

செனற்சபையின் தலைவரான சேர் ஜெறுட் விஜெயக்கூன் அவர்கள் சுகத்தாழ்வுகாரணமாகத் தமது பதவியை இராசினாமாச்செய்ய விருக்கிறாரென்றும், அவரது ஸ்தானத்தைத் திரு. ஈ. ஏ. பி. விஜெயரத்ன வகிப்பாரென்றும் சென்றவாரம் ஓர் செய்திபரந்தது. ஆனால், சேர் விஜெயக்கூன் அவர்கள் கூடியவிரைவிலே தமது பதவியைக் கையேற்றுநடத்துவாரென அதிகாரபூர்வமாகத் தெரியவருகிறது.

### கூட்டுறவுப் பயிற்சிக்கழகம்

யாழ்ப்பாணப்பட்டணத்திலே மணிக்கோபுரவீதியிலுள்ள பத்தாம் இலக்க கட்டிடத்தில் இம்மாசம் 7-ந்திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூட்டுறவுப்பயிற்சிக் கலாசாலை திறந்துவைக்கப்படவிருக்கிறது. உணவு - கமத்தொழில் மந்திரியாரின் பாராளுமன்றக் காரியதரிசியான திரு. வி. குமாரசாமி அவர்கள் அதனைத் திறந்துவைப்பார். அவ்வேளை சமுகமளிக்கும்படியாய்ப் பெரும்பாக கூட்டுறவு ஐக்கியசமாஜ தலைவரும், அங்கத்தவர்களும் பிரமுகர்கள் பலருக்கும் அழைப்புப்பத்திரங்கள் விடுத்திருக்கின்றார்கள்.

### ஓர்புதிய பரிஸ்றர்

யாழ்ப்பாணத்திலே பிரபலம்பெற்ற பிரக்கிராசியாராயிருந்து சமீபத்திலே காலஞ்சென்ற திரு. ஆர். ஆர். நல்லையா, ஜே. பி., ஏ. பி. ஈ. அவர்களின் புதல்வரான திரு. ஆர். ஆர். நல்லையா அவர்கள் ஓர் பரிஸ்றராக அரங்கேறியிருக்கிறாரென அறிகின்றோம்.

### ஆகாயப்பந்தையம்

ஆவணிமாத உல்லாசவிழாக்களின் ஆரம்பமாக இலங்கை ஆகாயக்கழகத்தால் ஒழுங்குபண்ணப்பட்டுவரும் காங்கேசன்துறை—கொழும்பு ஆகாயப்பந்தையத்திலும், ஆகாயவிளையாட்டுக் காட்சியிலும் கலந்துகொள்ளுமாறு இந்தியாவிலும், பாகிஸ்தானிலுமுள்ள ஆகாயப்பறக்குங்கிளப்புகள் அழைக்கப்பட்டிருக்கின்றன. இந்தஆகாயப்பந்தையம் இலங்கையில் நடைபெறவிருக்கும் முதலாவது பந்தையமாகும். ஆகாயவிளையாட்டுக்காட்சியோ இங்கு முன்னர்நிகழ்ந்தவற்றிலும் மிகமேம்பட்டதாயிருக்குமாம். இதிலே கலந்துகொள்ளுமாறு இத்தகையவிளையாட்டுக்காட்சியில் மிகுந்தஅனுபவம் படைத்த ஆகாயப்படைவிமானங்களும் அழைக்கப்படும்போல் இருக்கிறது. ஆகாயப்பந்தையத்திலே அந்தந்தவிமானங்களின் தீவிரகதிக்கேற்ப ஆரம்ப நேரங்கள் குறிக்கப்படும். பதமையாகப் பறக்கும் விமானங்கள் முதலில் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும். தீவிரவிமானங்கள் பிந்தப்புறப்படும். பறக்கும் நேரத்தைக்கொண்டே வெற்றிகள் கண்டுகொள்ளப்படும்.

### அமெரிக்க அரிசிவரத்து

இலங்கைக்குத் தேவையான அரிசி முழுவதும் கடந்தகாலங்களில் பர்மாவிலிருந்தே கிடைக்கலாயிற்று. ஆனால், இவ்வருடத்தின் முதல் ஐந்துமாதங்களிலும் இலங்கையில்வந்து இறக்குமதியான 32,80,175 அந்தர் அரிசியில் 21,89,662 அந்தர் பர்மாவிலிருந்தும், 3,01,414 அந்தர் தாய்லாந்திலிருந்தும், 1,39,703 அந்தர் யப்பானிலிருந்தும், 3,32,916 அந்தர் ஆசியாவின் பிறநாடுகளிலிருந்தும் வரலாயிற்று. கடைசியாக இருவாரங்களின்முன் சில்வரேக் எனும்கப்பலிலே 1,84,000 அந்தரும் சூசாறு எனும் கப்பலில் 1,64,000 அந்தரும் அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்து கிடைக்கலாயிற்று. பர்மாவிலே அரிசிவிலை தீவிரமாக அதிகரித்துக் கொண்டுபோவதனலே நமது அரசினர் பிறநாடுகளிலிருந்து குறைந்தவிலையில் அரிசிதருவிக்க வேண்டியநிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் இலங்கையின்வருங்கால உணவுத்தேவைகளைப் பற்றிப் பிரித்தானிய அதிகாரிகளுடன் கலந்துபேசுவதற்காகக் உணவு-கமத்தொழில்மந்திரியார் சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் சென்றதிங்கட்கிழமை விமானத்திலே அங்குசென்றிருக்கின்றார்.

### மன்னாரும் ஆடுவளர்ப்பும்

கமத்தொழிற்பகுதி அதிகாரிகள் தொடக்கியிருக்கும் ஓர் திட்டமானது அனுகூலமடையுமானால் இன்னும்ஐந்து வருடத்துக்கிடையில் மன்னார், வவுனியாப்பிரிவுகள் இலங்கைக்குத் தேவையான வெள்ளாட்டுமாமிசம் முழுவதையும்கொடுக்கக்கூடியனவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது வீட்டுக் கொல்லைப்புறத்தில் வெள்ளாடுகளை வளர்ப்பதாகும். கமத்தொழிற்பகுதி அதிகாரிகள் அங்கு கிராமங்கள்தோறும்சென்று வீட்டுக்கொல்லைப்புறத்திலே வெள்ளாடுகளை வளர்க்குமாறு கிராமவாசிகளை ஊக்கப்படுத்தி வருகின்றார்கள். ஒன்று அல்லது இரண்டு வெள்ளாடுகளுடன் ஆட்டுவளர்ப்பைத் தொடக்கும்படியாக ஆலோசனைகூறி ஆடுகளைப் பெருக்கும்விஷயமாய் அவர்களுக்குச்சில சகாயங்களும் செய்யப்படுகின்றன.

### சுப்பிறீங்கோட்டு நீதியரசர்கள்

இலங்கைச் சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களில் ஒருவராகச் சென்றகார்த்திகைமாதம் நியமனஞ்செய்யப் பெற்றவரான திரு. என். கே. சொக்ஸி அவர்கள் சென்றதிங்கட்கிழமை தம்பதவியிலிருந்து விலகலாயினர். அதனால் சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களின் ஸ்தானங்களில் இரண்டு தற்போது காலியாயிருக்கின்றன. திரு. டயஸ் நீதியரசரின் மரணத்தாலே மற்றோர் ஸ்தானம் காலியாயிருந்துவந்தது.

### வாழ்க்கைச் செலவு

இலங்கையிலே வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை சென்ற ஆனியிலே மூன்றால் அதிகரித்து 279 ஆகியிருக்கிறது. இவ்விதம் அதிகரிக்கக்காரணம் மாக்கறிவகைகளின் விலையேற்றமேயென்று சொல்லப்படுகிறது. செத்தல் மிளகாய், புடவைஆகியவற்றின் விலைகள் குறைந்திராவிட்டால் இத்தொகை இன்னும் அதிகரித்திருக்குமாம். சென்ற வைகாசியிலே வாழ்க்கைச் செலவுப் புள்ளித்தொகை 276.

### மன்னார் கள்ளுத்தவறணைகள்

மன்னார்ப்பிரிவிலே இவ்வருடம் கள்ளுத்தவறணைகளின் குத்தகைவிற்பனவு 1,28,000 ரூபாவாலே அதிகரித்திருக்கின்றது. இதற்குக்காரணம் சாராயத்தின்விலை அதிகரித்தமையே என்று சொல்லப்படுகிறது. பேசாலைக் கள்ளுத்தவறணைக்குத்தகை 42,500 ரூபாவிலிருந்து 92,000 ரூபாவாகவும், மன்னார்ப்பட்டின கள்ளுத்தவறணைக் குத்தகை 83,000 ரூபாவிலிருந்து 1,42,000 ரூபாவாகவும் அதிகரித்திருக்கிறது.

### நகரசங்க தேர்தல்கள்

கொழும்பு நகரசபைத் தேர்தற்சரித்திரத்தில் முதன்முறையாக வருகிற மார்கழிமாதம் நடைபெறவிருக்கும் நகரசபைத்தேர்தலானது 31 வட்டாரங்களிலும் ஓரேநாளில் நடத்திவைக்கப்படவிருக்கின்றது. அதற்குத் தாங்கள் முற்றாகத்தயாரென்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். கொழும்பு, கண்டி, காலி, நீர்கொழும்பு நகரசபைகளினதும், ஏழுபட்டினசங்கங்களினதும், 27 சிறுபட்டினசங்கங்களினதும் தேர்தல்கள் வருகிற கார்த்திகை, மார்கழி மாசங்களில் நடைபெறவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### மூத். இரபாயெலா மேரி

இற்றைக்கு 27 வருடங்களின் முன் பரமபதம்அடைந்தவளும், யேசுவின் திருஇருதய பணிப்பெண்கள் கன்னிகாசபையை அடியிட்டவளுமான ஆசா. இரபாயெலா மேரிஅம்மாள் சென்ற மாதம் அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலே முத்திப்பேறு பெற்றபட்டம் அருளப்பெற்றபோது அவள் சுற்றத்தவர்களான எண்பதுபேரும் அங்கு சமுகமாயிருந்தார்கள். 1938-ம் ஆண்டு ஐப்பசி மாதம் அவள் சலிகையால் அற்புதமாகக் குணமடைந்த அனன் சியேஷன் டோசியோஎனும்பெண்மணியும் ஸ்பானியதேச பலென்சியாநகரிலிருந்து அங்குபோய் அவ்வேளை சமுகமாயிருந்தாள். இத்திருவைபவத்திற்கென ஸ்பானியதேசம் ஒன்பது மேற்றிராணிமார்களையும், அரசாங்க, நகரசபைப் பிரதிநிதிகள் பலரையும் அனுப்பிவைத்தது. இவர்களிலே மூத். இரபாயெலா மேரி பிறந்த மாகாணமும், பட்டினமுமாகிய கோர்டோலாவிலிருந்தும், பீட்ரோ அபாத்திலிருந்தும் போன பிரதிநிதிகளும் அடங்கியிருந்தார்கள். அதிகதூரமானயப்பானிலிருந்தும் யாத்திரிகர்கள் அங்குசென்றிருந்தார்கள். ஏனெனில், இவளது கன்னிகாசபை 18 வருடங்களாக அங்கு தொண்டாற்றி வந்திருக்கிறது.

### ஆபிரிக்காவின் வேதவிருத்தி

"ஆபிரிக்காக் கண்டத்திலே தீவிரவேகத்தில் திருச்சபை பரந்துகொண்டிருக்கின்றது; அதனல் ஆபிரிக்கா இங்கிலாந்துக்குக் கத்தோலிக்கமிஷனரிமாரை அனுப்பிவைக்குங்காலமும் வரக்கூடும்" என்று சமீபத்திலே பேர்மிங்காம்நகரில் நடைபெற்ற கூட்டம்ஒன்றிலே வண. கொர் மைக்கிளெமென்ற் சுவாமியார் கூறியிருக்கின்ருர். கிழக்கு ஆபிரிக்காவிலும், மேற்குஆபிரிக்காவிலும் கத்தோலிக்கரின் தொகை 1927-ம்ஆண்டிலே 12 லட்சத்து 50 ஆயிரம் பேராயிருந்து இன்று 1 கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் பேராக அதிகரித்திருக்கின்றது.

### பிறங்கோ கூறுகின்றூர்

பொதுஅரசியல் நிலைமைபற்றிச் சிலதினங்களின்முன் ஸ்பானிய பாராளுமன்றத்தில் ஜெனறல் பிறுங்கோ அவர்கள் பேசியபோது, கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுதற்கான தலைசிறந்தஆயுதங்களில்ஒன்று சமயமேஎனக் கூறியிருக்கின்ருர். "மேலைத்தேச அரசுகள் செய்யும்திட்டத்திலே ஆத்மீகதத்துவங்களுக்குச் சகலவிதமான பாதுகாப்புகளும் சேர்க்கப்படவேண்டியது அவசியமாகும்; ஏனெனில், அவைகளே நமது பலத்தின் முக்கியமான மூலகாரணமாகும்; கம்யூனிஸ்த நாஸ்திகமானது நாஸ்திகத்தாலே எதிர்த்து வெற்றிகொள்ளப்படக்கூடியதன்று; ஆனல், சமயமானது கொண்டிருக்கவேண்டிய மிகமேலான முக்கியத்துவத்துக்குக் கொடுபடவேண்டியபங்கைக்கொடுப்பதாலேயேவெற்றிகொள்ளப்பட வேண்டியது" எனவும் அவர் கூறிநின்ருர்.

### பிறநாடுசென்ற குருமார்

கம்யூனிஸ்தஆட்சி நடைபெறும் நாடுகளிலே தங்கள் பட்டணங்கள் கிராமங்களிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டுக் கம்யூனிஸ்தவேதகலாபனையைத் தாங்கவாற்ருது சேமத்தைவேண்டிப் பிறநாடுகளை அடைந்திருக்கும் குருமாரின் தொகை 612 பேரென்று அகதிகளைப்பாதுகாக்கும் அமெரிக்க ஐக்கியதேச கத்தோலிக்க கம்மிற்றி அறிக்கையிட்டிருக்கின்றது. இவர்களிலே 415 குருமார் 1948-ம் ஆண்டு ஐப்பசிமுதல் இந்தக் கம்மிற்றியின் ஆதரவிலே அமெரிக்க ஐக்கியதேசத்துக்கு அழைக்கப்பெற்று அங்குள்ள 75 மேற்றிராசனங்களிலே தொண்டாற்றிவருகின்ருர்கள். மற்றும் 100 குருமார் தனிப்பட்டவர்களின் ஆதரவிலே அத்தேசஞ்சென்றிருக்கின்றனர். 97 குருமாரை மறுதேசங்கள் வரவேற்றுள்ளன. அ. ஐ. தேச கம்மிற்றியானது மேலும் 116குருமாரைக் குடியேறுவோராக ஏற்றிருக்கிறது.

### பிறேசிலும் கம்யூனிஸமும்

ஸ்பானிய உள்நாட்டுயுத்தம் முடிந்ததும் பிரான்சில்போய் அடைக்கலம்புகுந்த ஐயாயிரம் ஸ்பானிய கம்யூனிஸ்தர்களும் சர்வதேச அகதிகள்ஸ்தாபனத்தின்மூலம் தென்னமெரிக்காவைச்சேர்ந்த பிறேசில்நாட்டில் போயடைந்தார்கள். இவர்களைத்தவிர ஆயிரக்கணக்கான ரூஷியர், செக்கியர், ஹங்கேரியர், மசதோனியர், அல்பானியர், பால்த்தியர்களும் அங்கு போய்ச் சேர்ந்துகொண்டார்கள். இவர்கள் 1945-ம்ஆண்டுமுதல் தங்கள் கம்யூனிஸ்த திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரத்தொடங்கி அந்நாட்டுமக்களுக்குக் கொறில்லா யுத்தமுறைகளைப் பயிற்றியும், நகரங்களில் சதிவேலைகளை வளர்த்தும் வந்தார்கள். கம்யூனிஸ்தர்கள் தலைகாட்டும் பிறநாடுகளிற்போன்று இப்போது அங்கும் யுத்ததளவாட பண்டகசாலைகளும், வெடிமருந்துச்சாலைகளும் சதிமானமாக எரியூட்டப்பட்டுப் பெரும்வெடிவிபத்துகளும், அக்கினிப்பிரவாகங்களும் ஏற்பட்டுவருகின்றன. பொதுசன பரிபாலனத்திலே கம்யூனிஸ்தர்கள் பதமையாக அதிகமதிகமான மூலாதாரபதவிகளைக் கைப்பற்றிவருகின்ருர்கள். அதனல் அதிகரித்துவரும் கம்யூனிஸ்த அச்சுறுத்தலை ஐக்கியமுன்னணியாகநின்று எதிர்த்து ஒழித்துவிடுமாறு அங்கே தேசீய கிறீஸ்தவநிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது சனநாயக ஸ்தாபனங்கள் பிறேசிலியர்கள் அனைவரையும் ஐக்கியப்படுத்துவதிலும், சமூக, பொருளாதார, கலாசாரபிரச்சினைகளில் [illegible] பதிலும், கிறீஸ்தகுடும்ப பாரம்பரியங்களைப் பண்படுத்தி வைதிக, லௌகிககல்வியைப் பயிற்றுவதிலும் அதிகமுயற்சிஎடுத்து வருகின்றது.

### பாப்பரசருக்குப் பாராட்டுரை

அமெரிக்க ஐக்கியதேச ஜனதிபதித்தேர்தலிலே குடியரசுக் கட்சி அபேட்சகர்களில் ஒருவரும், "பெரிதும்மதப்பற்றுள்ள ஓர் வெளிப்படையான புறெட்டஸ்தாந்த"ரென்றுதம்மைப்பற்றிக் கூறியுள்ளவருமான ஜெனறல் ஈசனேவர் அவர்கள் சமீபத்திலே ஐரோப்பாவிலிருந்து புறப்படுமுன் ஒல்லாந்தைச் சேர்ந்த சீயிஸ்ற்நகரில்நிகழ்ந்த மகாநாடுஒன்றில் பத்துநாடுகளிலிருந்து வந்துகூடிய ஆகாயப்படைப் பிரதமவிசாரணைக்குருமாருக்கு"நாஸ்திக கம்யூனிஸ"த்தைப்பற்றிப் பேசியபோது கூறியதுவருமாறு: "உலகத்தைப் பாழ்படுத்தவும், மனித ஆத்துமங்களை அடிப்படுத்தவும், அவர்களை காலால்மிதித்துக் கீழ்ப்படுத்தவும், அவர்களை மற்றொன்றிற்காகவுமல்ல, ஆனல், கிறெம்லினில் வீற்றிருக்கின்ற ஓர் சர்வாதிக்கு அடகுபொருட்களாக அவர்களை கையளிக்கவும் பாடுபடுகின்ற இந்தத்தீய இலாபநோக்குள்ள கம்யூனிஸத்தைஎதிர்த்து றோமாபுரியில் பாப்பரசர்—பரிசுத்தபிதா தமது அணிவகுப்பாலே நடத்தியிருக்கும் போராட்டத்தின் சிறந்த முறையையிட்டு உள்ளபடியே கிறீஸ்தஉலகில் எவருமே சந்தோஷங் கொள்ளாதிருக்கமாட்டார்" என்பதுவே.

---

தலைவில்லு

## பெரிய சந்தானமாதா திருநாள்

### ஆடி 27-ந் திகதி

ஆடிமாதம் 17-ந் திகதி கொடியேற்றம்

ஒவ்வொருநாளும் மாலை 6-30 மணிக்கு ஆராதனை தொடங்கும்.

ஆடிமாதம் 20-ந் திகதி முதல்திருநாள்.

,, 26-ந் திகதி பொந்திபிக்கல் வேஸ்பர்ஸ்.

,, 27-ந் திகதி காலை 6-30 மணிக்குப் பொந்திபிக்கல் பாடற்பூசை. காலை 6 மணிக்குக் கடைசிப்பூசை.

சந்தானமாதா திருநாளுக்கு வீட்டுவசதி, கடைவசதி வேண்டியவர்கள் ஆடிமாதம் 15-ந் திகதிக்குமுன் ஒழுங்குசெய்து கொள்ளவேண்டியது.

ஆடிமாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரம். இயற்கைப்புஷ்பங்கள் நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளப்படும்.

**Rev. Fr. Arthur Martin Fernando,**
Administrator.

Talawila, Etalai.

---



புல்லாவெளி

## அர்ச். செபஸ்தியார் திருநாள்

இத்திருநாள் வழமைபோல ஆடி மீ 8-ந் திகதி கொண்டாடப்படும். ஆனி மீ 29-ந் திகதி கொடியேற்றத்துடன் நோவனைகள் ஆரம்பமாகி நடைபெறும்.

ஆடி மீ 5-ந் திகதி ஞானவொடுக்க போதகர் திரிதின ஞானவொடுக்கத்தை ஆரம்பிப்பார்.

6-ந் திகதி மாலையாராதனையின்பின் 11 மணிக்கு திருமணித்தியாலம். 12 மணிக்கு நடுச்சாமப் பூசை நடைபெறும்.

7-ந் திகதி பிற்பகல் 5 மணிக்கு திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், மாலை ஆராதனை.

8-ந் திகதி முற்பகல் 4 மணி தொடக்கம் திவ்விய பூசைப் பலிகள் நடைபெறும். 7 மணிக்குத் திருநாள் பாடற்பூசை.

ஆன்ம காரியங்களைக் கவனிக்கக் குருமார் சமுகமாயிருப்பார்கள்.

யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படும்.

கட்டளைக்குரவர்.

---

**WANTED** immediately a Manager for the Chundikuli Co-operative Stores Society Limited. Salary Rs. 75/- to Rs. 85/- per mensum to begin with according to qualifications. After one year's probation, if found suitable, salary will be raised to Rs. 100/- per mensum. Security Rs. 500/- in cash and Rs. 500/- in landed property or through Guarantee Company. Further increments will be decided by the Committee from time to time. Preference will be given to those with previous experience. Apply with copies of testimonials and character certificate to the Honorary Secretary. Closing date of application 15th July, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

### ஆடிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 4 | அ. பாப்புமார் | (சி) |
| சனி | 5 | அ. அக். மரியா சக்கரி. | (வெ) |
| ஞா | 6 | இஸ்பிரீத். ஆகமனத்தின் பின் 5-ம் ஞாயிறு — அ. கோவாரப்பர் | (ப) |
| திங | 7 | அ. சிறில் | (வெ) |
| செ | 8 | அ. எலிசபேத்தம்மாள் | (வெ) |
| புத | 9 | அ. அனத்தோலியம்மாள் | (ப) |
| வி | 10 | அ. ஏழு வேதசாட்சிகள் | (சி) |

சத்தியவேத

பாதுகாவலன்

1952-ம் ஆண்டு

ஆடி மாதம் 3-ந் திகதி

## சதா சகாயமாதா

நாம் திரித்துவஸ்தோத்திர மந்திரத்தில் "ஆதியிலே ஆனதன்மை இப்பொழுதும் எப்பொழுதும் அநாதிசதாகாலமும் ஆகக்கடவது" என்று சொல்லுகிறோம். சாப்பாட்டிற்குப்பின் சொல்லும் நன்றியறிந்த ஸ்தோத்திரத்திலே, "சதாகாலத்துக்கும் நித்தியருமாய், இராச்சியபரிபாலனம் பண்ணுகிறவருமாய் இருக்கிற சருவவல்லபமுள்ள சருவேசுரா...." என்று சொல்லிவருகிறோம். பலசெபங்களின் முடிவிலே "இந்த மன்றுட்டைத் தேவரீரோடும், இஸ்பிரீத்துசாந்துவோடுங் கூடச் சதாகாலமாகவும் சீவியராய்...." என்றுசொல்லி முடிக்கிறோம். ஆனால், இவற்றில்வரும் "சதாகாலம்" என்பதும், "சதா" என்பதும் ஒரே கருத்துடையனவாகும். சதாகாலம் என்பதும், சதாஎன்பதும் எப்பொழுதும், எக்காலமும் என்று அர்த்தங்கொள்ளும்.

நிற்க, பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே நவமாக ஆரம்பமாகியிருக்கும் "சதா சகாயமாதா" வின் (Our Lady of Perpetual Succour) பக்திவணக்கமானது நாளொருவண்ணமாய்ப் பரந்து வளர்ந்துகொண்டுவரக்காண்பது சந்தோஷமே. சதா சகாயமாதாவை எக்காலமும் உதவிபுரியும் உபகாரமாதா என்றும், இடையறுது சகாயஞ்செய்யும் மாதாவென்றும், அயராது உதவிசெய்யும் மாதாவென்றும், ஓயாத சகாயமாதாவென்றும் பக்தர்கள்பலரும் தமிழ்மொழியிலே, தத்தம் மனதுக்குகந்த வகையிலே அழைத்துப் பக்திசெய்து அவர் சகாயத்தை இரந்துவரக் காண்கிறோம்.

சம்பத்திரிசியார் கல்லூரிப் பெரியவாயிலின் முன்புறச்சுவரிலே ஓர் அழகானபடம்—தேவதாயாரையும், அவர் கரத்தில் திவ்வியபாலனையும்கொண்ட ஓர் அழகான படம் — பலவருடங்களாக இருந்துவருவதைப் பலமுறைகளிலும் நாம்அவதானித்துவந்தோம். ஆனால், அஃது ஓர் சாதாரண படமென்றே நாம் கருதிவந்தோம். ஆனால், நமது ஆசனக்கோவிலிலே சதாசகாயமாதாவின் பக்தி ஆரம்பமான பின்னர்தான் அதனைப்பற்றித் தெரியவந்து அதன்விசேஷம் யாதென ஆராய்ந்தறிய வேண்டுமென ஆவல்கொள்ளலானேம்.

ரோமாபுரியிலே லத்தறன் அருளப்பர் மகாலயத்திலிருந்து மரியநாயகியின் மகாலயத்திற்குச் செல்லும்வழியிலே, மெருலானேஎன்ற வீதியிலே இருந்துவருகின்ற அர்ச். அல்போன்ஸ் லிகோரியாரின் பேரானஆலயத்திலே பரிசுத்ததேவதாயாரின் அழகியபடம்ஒன்று பூச்சியமாகவைத்து அல்லும்பகலுமாக அனுதினமும் பூசித்துவணங்கப்பட்டு வருகிறது. இதுதான் அநேகபுதுமைகளாலும், அற்புதசகாயங்களாலும் பேர்பெற்றுவிளங்கும் "சதா சகாயமாதா" படமாகும். இதிலே தேவதாயார் திவ்வியபாலகனை அன்புடன் அரவணைத்துப் பாதுகாக்கின்றார். இருவர் பக்கத்திலும் அதிதூதர்களான அர்ச். மிக்கேல், அர்ச். கபிரியேல்எனும் இருசம்மனசுகளும் திருப்பாடுகளின் எத்தனங்களைத் திருக்குழந்தையேசுவுக்குக் காண்பித்தவண்ணம் காணப்படுகின்றனர். மாதாவும், திருமகனும் பசும்பொன்னுற்செய்து, பளிரிட்டொளிரும் நவரத்தினங்கள்பதித்து, விசித்திர வேலைப்பாடுடையனவாய் விளங்கும் இரு கிரீடங்களை அணிந்திருக்கின்றனர். மாதா கவலைதோய்ந்த வதனத்துடன் தமது திருமகனுரின் வலதுகரத்தைப் பற்றியவண்ணமாய் அவரிடம் ஏதோ அருந்திவருந்தி இரந்து கேட்பார்போல் காட்சியளிக்கின்றார். தேவமகனுரோ இரு அதிதூதர்களிலும் ஒருவர்காண்பிக்கும் திருச்சிலுவையைப் பெருங்காதலுடன் உற்றுநோக்கியவராய்க் காணப்படுகின்றார். அர்ச். சதா சகாயமாதாவின் படத்தைக் கண்ணுறுவோர் கண்டுகொள்ளக்கூடிய கருத்துக்கிசைந்தகாட்சி இதுவேயாகும்.

(வளரும்.)

## "பாலர் செபத்துணை"

"பாலர் செபத்துணை" எனும் அழகிய நாமந்தாங்கிய அருமையான செபப்புத்தகம் ஒன்று வரப்பெற்றேம். இஃது யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கல்லூரி ஆரம்பகல்விச்சாலை மாணவர்களின் உபயோகத்திற்காக, அதன் தலைவராகும் வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்களால் பாலியமாணவர்களுக்கு ஏற்ற இனியநடையிலே, நல்லமாதிரியாகத் தொகுக்கப்பெற்றுக் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் பாலர்செபக்களஞ்சியமாகக் காட்சியளிப்பதாகின்றது. காலை மாலைச் செபம், பூசைஉதவிமந்திரம், பூசையிலே இடையிற்சொல்லத்தக்க செபம், தேவநற்கருணை வாங்குமுன்னும், வாங்கியபின்னும் செய்யத்தகும்செபம், நிந்தைப்பரிகாரதோத்திரம், பரிகாரப்பிரார்த்தனை, சற்பிரசாதசந்திப்பு, பிரார்த்தனைகள், இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் செபமாலை, ஆங்கிலத்திலும், லத்தீனிலுமுள்ள தெரியலானகீதங்கள், தமிழ்க்கீர்த்தனங்கள் என்பனவாய் இதில் அடங்கியுள்ளவற்றையெல்லாம் ஆரம்பகல்விச்சாலை மாணவர்கள் இளமையிலேயே நன்குபயின்றுகொள்வார்களாயின்—அவைகளெல்லாம் பசுமரத்தாணிபோல் அவர்கள் மனத்திலும், நாவிலும் நன்குபதிந்துகொள்ளுமாயின் அவர்கள் பெரும்அதிஷ்டசாலிகளே எனலாம். ஏனெனில், தங்கள் இளமையிலே, தங்கள் சின்னஇருதயங்களிலே அவர்கள் தங்கள் வேதானுசாரத்துக்கும், வேதவிசுவாசத்துக்கும் சிறந்த அஸ்திபாரம் இட்டுக்கொண்டார்களெனச் சந்தேகமின்றியே சிந்திக்கலாம். சிலமுக்கியமானசெபங்கள் தமிழிலும், அதனைத்தொடர்ந்து ஆங்கிலத்திலும் தரப்பட்டிருப்பதானது அவர்கள் இருமொழிகளிலும் அவற்றைப்பயின்றுகொள்ளவாய்ப்பாகின்றது. இதிலடங்கிய செபங்களையும், கீதங்களையும், பிறவற்றையும்கண்ணுறும்ஆசிரியர்கள் தங்கள்பாலியமாணவர்க்கு அவைகளைப் பயிற்றப் பெரிதும்ஆர்வங் கொள்வார்களெனலாம். ஆசிரியரோடுமாத்திரம் நின்றுவிடாது பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் வீட்டிலேஇதிலடங்கிய செபங்களைச் சொல்லவும், கீதங்களைப் படிக்கவும் இடையிடையே கரிசனையெடுத்து வருவார்களாயின் அவர்கள் சின்னச்சம்மனசுகள்போலாகி இதனை ஆக்கித்தந்த சுவாமியவர்களின் நல்ல நோக்கத்தைப் பூர்த்திசெய்து பயனடைவார்களென நம்பியிருக்கலாம். இதனை ஏனையகல்லூரிகளின் ஆரம்பகல்விச்சாலைகளும் தருவித்து உபயோகிப்பது வரவேற்கத்தக்கதாகும். 192 பக்கங்கொண்டது. புத்தகமும் பார்வைக்கழகானது விலைரூபா 1 சதம் 75. நமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

## முற்றிப்பழுத்த மொழிநிபுணர் சுவாமி. ஞானப்பிரகாசர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பல்கலைக்கழகம் மேற்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்புவாய்ந்த பணியை— ஒருஸ்தாபனம் செய்யவேண்டிய அருந்தொண்டைச் சுவாமி ஞானப்பிரகாசர் தனிநின்று ஆற்றியிருக்கிறார்கள். சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் முதல்மடலின் ஆறுபகுதிகளும் அச்சிடப்பெற்றுள்ளன. இந்த அகராதியைத் தம் வாழ்நாளிலேயே முற்றமுடிக்க வழிதேடிவைத்தனர்என்பது மகிழ்ச்சிக்குரியசெய்தி. திராவிடமொழிகளிலுள்ள வேர்ச்சொற்கள் வெற்றொலிகள்அல்ல, அவை அனைத்தும் பொருள்பொதிந்த மெய்ம்மொழிகள் என்பதை நிறுவுகின்றார். தமிழ்ச்சொற்களுக்கு மிகஎளிதாகச் சமஸ்கிருத வேர்ச்சொற்களை மூலமாகக் காட்டுவது ஒருசம்பிரதாயம். இதையொட்டியே உலகம், கலை, நகுலம்போன்ற பலசொற்களுக்குச் சமஸ்கிருதத் தாதுகாட்டப்பெற்றன. சுவாமிகள் இச்சொற்களுக்கெல்லாம் தமிழவேர்ச்சொற்களை ஆராய்ந்து காட்டுகின்றார்.

யோகி சுத்தானந்த பாரதியார்அவர்கள் கூறுவதுபோல, நல்லுணர்ச்சியுள்ள தமிழ்ப்பெருமக்கள் இச்சொல்வல்லவனை நினைந்து தமிழ்ப்பணிபுரிய வேண்டும்.

"தமிழே உலகத் தாய்மொழி
என்று
பறையடித் தோதிய பன்
மொழிப் புலவன்
சொல்லாராய்ச்சியும் தொல்லா
ராய்ச்சியும்
வல்லவன் பைபிள் வழியே
நடப்போன்
மலையுப தேசமே கலையெனக்
கொண்ட
ஞானப் பிரகாச நாவலன்
இலங்கை
என்றும் போற்றும் எழிலார்
வித்தகச்
செல்வனைத் தமிழர் சிந்தித்
துநிதம்
புரிக தமிழ்ப்பணி எந்தாய்
வாழ்க."

நல்லூர் மீசாம்

## நாம் பட்ட பா...டு

மானிப்பாய் அர்ச். அந்தோனியார் திருநாள் வந்துவிட்டது. ஆனால், என்னமோதெரியாது ஒன்றுமே கைகூடமாட்டேன் என்றுவிட்டது. வளவைப்பெருக்கித் துப்புரவாக்க வரும்படி சொல்லிவைத்த ஆட்கள் நேரத்தோடு வரவில்லை. வந்தும் அங்குமிங்கும் புனண்டிக்கொண்டு நின்றமையால் வேலைஒடவில்லை. பந்தலுமோ அரையும்குறையும். லைற்றுகள் மின்னிமின்னியும், முளாசியும்கொண்டிருந்தன. வாங்குகள், கதிரைகளும் கொண்டுவருவதற்கு ஆளில்லை. பாய்கள் அங்குமிங்கும் சிதறுண்டுபோய்க் கிடந்தன. கம்பளங்களுக்குத் தூர இடத்துக்கு ஆள் அனுப்பியபோது, கம்பளம் எடுத்துக்கொடுக்கும்ஆள் கோவிலுக்கு வந்துவிட்டார். இவையெல்லாம் போதாதென்றுற்போலப் பலதுக்கும் எமக்கோர் கையுதவியாய், பரியாய்இருக்கும் எமதுமோட்டர்வான் மூன்றுமணித்தியாலமாய்ப் பழுதுபட்டுப்போய்க் கொக்குவில் போஸ்ற்ஆபீசுக்குமுன்னால் கிடந்தது.

சனங்கள் மத்தியானத்தோடு வரத்தொடங்குவது வழக்கம். ஆனால், அன்றுபின்னேரம் ஐந்துமணிவரையும் ஓர்தலைக்கறுப்பையும் காணமுடியவில்லை. ஐந்துமணிக்குப்பின்னுல் ஊர் காவற்றுறையிலிருந்து முதற்கூட்டம் சனங்கள் வந்துசேர்ந்தார்கள். பின்பு தொட்டந்தொட்டமாய், ஒருவர்பின் ஒருவராய்க் கொஞ்சப்பேர் வந்தார்கள். தலைக்கறுப்புகளைப் பார்த்தோம். பஸ்களை எண்ணினேம். சகலமும் தூக்கமேதூக்கம். செபமாலையுடையமேளமும் அன்றைக்குத் தூக்கம்தான்.

மூன்றும்மணியும் அடித்தாயிற்று. சற்றுத்திரும்பி உபதேசியாரைப் பார்த்து, இவ்வளவும்தானே இந்தமுறை எங்கள்பெருநாள் என்றோம். மேற்றிராணியாண்டவரும் வந்திறங்கிவிட்டார். வழமையாகப் பலகுருமாருடன். இன்றோ ஒரேயொருவரோடு மாத்திரம். உடம்பு களைத்துவிட்டது. அதிலும்பார்க்க மனம் களைத்துவிட்டோம். ஆயாசத்துடன் நெற்றியைத் தடவிக்கொண்டு "இனிச் செபமாலையைத் தொடங்கும்" என்றோம்.

ஆனல், செபமாலைநேரத்தில் வந்து கொட்டுண்டதப்பா சனம். கிலுமொலு கிலுமொலென்று கோவில் வளவு நிறைந்துவிட்டது. வெளிச்சம் முழித்துப்பார்த்தது. பந்தல்சிறந்தது. கம்பளங்கள் பளபளத்தன. குருமாரும் பொலிந்துவிட்டார்கள். எங்கும் அமைதியும், அடக்கமும். எல்லோர் கையிலும் செபமாலை. ஒருவர்ஒருவரை நெரியாமல், இடியாமல் பயிற்சியளித்துப் பழக்கிவைத்தவர்கள்போல் தங்கள்தங்கள் இடங்களில் அமர்ந்தார்கள். மேற்றிராணியாண்டவர் செமினரிப் பாலியர், பதினைந்துகுருமார் துணைபுரிய வேஸ்பர்ஆரம்பித்தார்.

எமக்கும் தென்பு உண்டானது. மனம்குளிர்ந்தது. பிரசங்கம்முடிந்தது. ஒருபாலார் வெறும்காட்சிபார்க்க வந்தவர்கள்போல் இருப்பதுவழக்கம். பிரசங்கம் சாடையாய்க் கேட்பார்கள். பிரசங்கம்முடிந்தபின் அங்குமிங்கும் பார்ப்பார்கள். பின்பு வெளியேபோய் விடுவார்கள். இன்று அப்படியல்ல. முழந்தாளில் இருந்தார்கள். கடைசிக் காரணிக்கத்துக்குக் கைகளையும் விரித்துநீட்டினார்கள். வேஸ்பர்நேரத்தில் கழுத்தைநீட்டிக் கூர்ந்துபார்த்தார்கள். ஆசீர்வாதநேரத்தில் கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பினுர்கள். அவர்களும்செபித்தார்கள். லெக்குத்தூர் சுவாமியவர்கள் எழுந்தேற்றநேரத்தில் சுரூபத்தைச் சனங்களினூடாகக் கொண்டுசென்று ஆசிநீர்தெளித்தபோது தோன்றிய காம்பீரம்! திருச்சுரூபம் திரும்பவும் பீடத்தையடைந்ததும் மேற்றிராணியாண்டவர் ஆசீர்வதித்தார். சுமார் 3,000 பேர் என்னலாம். மழையும் சந்தோஷத்தினுல் சற்றே......

இம்முறை அங்குள்ள பெரியவீடானது யாத்திரிகர்கள் இரவில்தங்குவதற்கு வெகுவசதியாய் இருந்தது.

ஞாயிறன்றுகாலை இரண்டு தனிப் பூசைகளின்பின் 7-30 மணியளவில் மேற்றிராணியாண்டவர்அவர்கள் திவ்வியபூசை ஆரம்பித்தனர். "அந்தோனியார் அழைப்பது ஆண்டவரிடம் வழிநடத்த" என்பதே பிரசங்கத்தின் பொழிப்பெனலாம். திவ்வியபூசையின் பின் சுற்றுப்பிரகாரம். முதல்நாள் இரவிலும்பார்க்கச் சனத்தொகை அதிகம்கூடவென்பதே பொதுஅபிப்பிராயம். இதை யாரால் கணக்கெடுக்கக்கூடும்? ஆனுல், ஒன்று. சுற்றுப் பிரகாரத்துக்குச் சுரூபத்தைக் கொண்டு வெளிகொள்ளும்போதும், சுரூபத்தைத் திரும்பக் கொண்டுவரும் போதும் சனங்கள் ஒருநெரிசல்தான். அப்போ நாய்பட்ட பா...டும் ஓசந்தோஷம்தான்.

திருச்சுரூப ஆசீர்வாதத்தின்பின் மேற்றிராணியாண்டவர் புதியஆலயத்தின் நிலையத்தை ஆசீர்வதித்து அஸ்திவார முதற்பொழியைவெட்டி ஆலயத் திருப்பணியை ஆரம்பித்துவிட்டார். சவலைப்பருவம் முடிந்து வாலிபப் பருவம் ஆரம்பித்தது. அதுதான் அந்தோனியார்.

மேற்கூறிய வரலாறுமுழுவதையும் எம்மைச்சந்திக்கவந்த ஓர் நண்பருக்குச் சொன்னேம். ஆரம்பநோவனைகள் சிறப்பாய்நடந்ததையும், கடைசிநோவனையன்று நாம்பட்டபாட்டையும், சகலமும் இனிதாய்முடிந்ததையும் விளக்கினேம். அதற்குஅவர் "அதுதான் அந்தோனியார்" என்றூர். முதலிலே ஒருசிறியஆறுதலை — சந்தோஷத்தை— இன்பத்தைக்காட்டத் தம்மண்டைஇழுப்பார். பின்பு நல்லாய்ப்போட்டுக் கலக்கிக்கயக்குவார். இந்தக்கலக்கநேரத்தில் நாம் களைக்கக்கூடாது. அப்போதுதான் நல்லநம்பிக்கை வேண்டும். செபம்பண்ணவேண்டும் விடாப்பிடியாய். பின்பு காத்திராதவிதமாய்ச் சந்தோஷத்தையும் ஆறுதலையும்தருவார். அதுதான் அந்தோனியார். தம்முடையஅனுபவத்தில் இதற்குஅத்தாட்சியாக ஓர் அருட்சிக்குரிய சம்பவமும்சொன்னூர். அதை நாம் தருணம்வரும்போது வெளியிடுவோம்.

# தமிழர் சால்புக்கழகம்

தனிநாயகஅடிகளார் வித்திட்டார். வழக்கறிஞர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் நீர்ஊற்றினூர். கடந்த ஆதிவாரத்தன்று மாலைநேரத்தே கொழும்பில் வனத்தமுல்லையிலுள்ள தமிழர் பந்துபயிலணி மண்டபத்தில் முளை அரும்பியது.

"நீதியரசர் அவர்களே! தங்களைவிட இவ்வருமருந்தன்ன செடியைப் பெரும் விருட்சமாக வளர்க்கக் கூடியவர்கள் யாவர்இருக்கின்றனர்? தாங்களே இதைக் கண்ணுங்கருத்துமாக வளர்க்கவேண்டும்" என்று ஒரேமுகமாகக் கேட்டுக்கொண்டார்கள் அச்செடியின் சொந்தக்காரராகியதமிழ்மக்கள். அன்புமிகுந்த மக்களின்வேண்டுதல் அந்தஈசன் வேண்டுதலாகும். அன்புவேறு, இறைவன் வேறன்று. இரண்டும்ஒன்றேயாகும். அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்ப்பாள்.

"ஆம்! தமிழன்சால்பைப் பரப்புவேன்—தமிழன்சால்பை உலகெங்கும் பரப்ப ஆவனசெய்வேன்—தமிழர் சால்புக்கழகத்தைக் கண்ணுங்கருத்துமாக வளர்ப்பேன்" என்று உறுதியளித்தார் நீதியரசர் திரு. நாகலிங்கம்அவர்கள். தமிழர்சால்புக்கழகம் உதித்தது. தனிநாயகஅடிகளார் உளம் பூரித்தார். தமிழ்மக்கள் உளம்பூரித்தனர். செடி ஒருசாணுக்கு அன்றுதினமேவளர்ந்துவிட்டதுபோற் தோன்றியது. உண்மையில் ஒரு அளவில் தமிழனம்வாழ, தமிழ்மொழிவாழ, தமிழன்பெருமை உலகெலாம்பரவ அன்று அடியிடப் பெற்றதென்றே கூறவேண்டும்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணும்" என்று நம்மொழியை நாமேஇற்றைவரை புகழ்ந்துவந்திருக்கிறோம். ஆனுல், நம்முடன்சகோதரர் போன்று வாழ்ந்துவரும் சிங்களமக்கள் தன்னும் நம்மொழியின்பெருமையை அறிந்துகொள்ளச் செய்தோமா? இல்லவேஇல்லை.

ஏதோ தமிழன்னையின் முன்தவப்பயன் காரணமாக அந்தக்காலத்தில் வீரமாமுனிவர், கல்டுவெல், போப்பையர்போன்ற மேலைநாட்டவர்கள் தங்கள் விவிலியவேதத்தைப் பரப்புவதற்காகத் தமிழ்மொழியைக் கற்கவிரும்பிப் பின்னர் அதன் சுவையில்மூழ்கி அதன் செம்மை நலன்களைப் போற்றிப்

### தினகரன் ஆசிரியர்

பாராட்டி யிராவிட்டால்– சிலமொழிபெயர்ப்புகளாவது தத்தம்மொழிகளிற் செய்யாவிட்டால் தமிழ்என்று ஒரு செம்மொழி உலகிலுண்டென்று எவராவதுகூறினுற்கூட ஒருவரும் நம்பியிருக்கமாட்டார்கள் என்பதுதிண்ணம். இக்குறையைப் போக்குவதற்கு உதித்ததுதான் தமிழர் சால்புக்கழகம்.

தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி. தமிழர்நாகரிகம் மிகப்பழையது. வள்ளுவர், சேக்கிழார், கம்பர், இழங்கோ, அப்பர், மணிவாசகர், நம்மாழ்வார், ஔவைஆகியோரை ஈன்ற தமிழன்னையின்பெருமை அளப்பரிது. தமிழ்ச்சித்தர் சீனத்தில்உலாவினர். தமிழர் மேனுட்டவருடன் வாணிபஞ் செய்தனர். போகர்ஏழாயிரத்தில் நீராவிக்கப்பல்கட்டும் நுட்பங்கூடச் சொல்லப்பெற்றிருக்கின்றது. இவற்றையெல்லாம், இன்னும் இவைபோன்றவற்றையெல்லாம் உலகறிதல்வேண்டும். அவ்வாறுனுற்றுன் தமிழனுக்குமதிப்புண்டு. தமிழுக்கு மதிப்புண்டு. மற்றும்மொழியினரும் தமிழ்மொழியைக்கற்க மூற்படுவர். தமிழ்மொழி அழியாதுவாழமுடியும்.

இந்தஉயர்ந்த நோக்கத்தை நிறைவேற்றுதற்காகவே தமிழர்சால்புக்கழகம் நிறுவப்பெற்றுள்ளது. சிறந்தநோக்கம், சிறந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். சால்புக்கழகம் சிறந்த நற்பணி செய்யுமாக!

புத்தக மதிப்புரை

## இரத்தம் வடித்த லீலி

ஆசிரியர்: வண. வி. எம். காலி சுவாமிகள், எஸ். ஜே. தமிழாக்கம்: சகோதரர் பி. மரிய அலோய்சியுஸ், பாப்பரசர் குருமடம், கண்டி. அச்சகம்: தெ நொபிலி பிறெஸ், மதுரை. 48 பக்கம் கொண்டது. விலை பிரதி சதம் 75.

"இரத்தம் வடித்த லீலி" எனும் இந்த அழகிய லீலிப்புஷ்பம் யார்? தனது ஆருயிரினும் மேலாகமதித்த அருங்கற்பைக் காப்பதற்காகத் தனது ஆருயிரையே தியாகஞ்செய்து, அர்ச். செசிலியம்மாள், அர்ச். ஆகத்தம்மாள், அர்ச். பிரகாசியம்மாள், அர்ச். ஆஞ்ஞேசம்மாள்போன்ற கணக்கற்ற கன்னியர்குழாத்தில் ஓர் புனிதசீலியாக விளங்கும் அர்ச். மரிய கொறெற்றியே இந்த நறுமலர். அவளின் ஓரங்க நாடகமே இந்நூல். இதிலே நாடக பாத்திரங்க[illegible] யுடன்சம்பந்தப்பட்ட அநேகர் நடிக்கின்றனர். அதாவது கதாநாயகி, அவள் தாய்தந்தையர், கதாநாயகியைக் குற்றிப் படுகாயப்படுத்திய அலெக்சாந்தர், கொறெற்றியின் குடும்பவைத்தியர், பங்குக்குருவானவர், ஆஸ்பத்திரி விசாரணைக்குருவானவர் முதலானேரே. இந்தநாடகம் ஏழுகாட்சிகளாக வகுக்கப்பட்டு ஒவ்வோர்காட்சியும் கதாநாயகியின் வாழ்க்கைச்சரித்திரத்திலே ஒவ்வோர்பாகத்தை எடுத்துக்காண்பிக்கின்றது. படிக்கப்படிக்கப் மனதை உருக்கிக் கண்ணீர் உகுக்கும்படியாக எழுதப்பெற்றுள்ள இந்தநாடகத்தைச் சரிவர நடித்துக் காண்பிக்கிறதாயின் உள்ளம் எவ்வளவாக உருகுமென்றும், கண்ணீர் எவ்வாறு பெருகுமென்றும் சொல்லவேண்டியதில்லை. கண்டிமேற்றிராணியாண்டவர் இதற்கு அருளியிருக்கும் மதிப்புரையிற் கூறியிருக்கும் ஓர் பகுதியை ஈண்டுதருவதும் நமது மதிப்புரைக்கு ஓர் நறுமணம் கமழுவதாகும். அஃதாவது:

"இன்று புதினத்தில் புரையோடும் நவீனஉலகம் கற்பென்னும் ஒப்பற்ற புண்ணியத்தை எள்ளி நகையாடுகின்றது. கற்பின் பலி — அர்ச். மரிய கொறெற்றி இக்கால உலகினுக்கு ஓர் முன்மாதிரிகையாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறுள். சிறப்பாக, சிறுவர் சிறுமியருக்கும், ஏன் பெற்றோருக்குங்கூட இப்புனிதவதி ஓர் மேல்வரிச்சட்டமன்றோ? பெற்றோருக்குங்கூடஎன்றுஅழுத்தந்திருத்தமாய்ச் சொல்லுகிறோம். கிறீஸ்தவ தாய்மாருக்கோர் மேல்வரிச்சட்டமாக விளங்கும் அசுந்தா, தன் புதல்வி மரியாவை கிறீஸ்தவப் புண்ணியங்களில் பழக்கியிராவிட்டால் இன்று ஓர் புதிய அர்ச்சியசிஷ்டவளைத் திருச்சபை அடைந்திருக்கமுடியாது. மரியாவின் இருதயத்தில் கற்பென்னும் தூய புண்ணியத்தின்மேல் ஆழ்ந்த அபிமானத்தையும் பற்றுதலையும் சிறுபிராயத்திலேயே புகுத்தியிராவிட்டால், கற்பிற்கெதிரான கடும்புயலில் வெற்றி கண்டிருக்கமாட்டாள். கிறீஸ்தவப் பெற்றேரே, உங்கள்அந்தஸ்தின் பாரமான கடமைகளை உணருங்கள். ஓர் நாள் கடவுளுக்குமுன் கடினமான கணக்குக் கொடுக்கவேண்டியிருப்பீர்கள்!

அர்ச். மரிய கொறெற்றி நமக்கோர் எடுத்துக்காட்டும், முன்மாதிரிகையுமட்டுமல்ல; 'மோட்சம் அல்லது நரகம் — சர்வேசுரன் அல்லது சாத்தான்' — இவ்விதமான சோதனையில் சிக்கித் தப்பவழியின்றித் தவிப்போருக்கு நல்லசர்வேசுரனிடம் வல்லமையுடன் பரிந்துபேசுகிறுள். அவள் செய்த முதற்புதுமைகளில் ஒன்று,— தன்னைக் கொலைசெய்த அலெக்சாந்தரின் மனமாற்றம் — கன்னியர் புடைசூழ விண்ணுலகச் சோபையுடன் அலெக்சாந்தருக்குக் காட்சியளித்தாள். கொலைஞனுக்கு இப்பேருபகாரத்தைச்செய்த அர்ச். மரிய கொறெற்றி ஆபத்துநேரத்தில் தம்மை அண்டிவரும் தாசர்களைக் கைவிட்டுவிடுவாளோ?

அர்ச். மரிய கொறெற்றியைப் பற்றி அதிகமதிகமாய் உலகத்தினர் அறியட்டும். அவளுடைய திருப்படத்தை ஒவ்வொருபாடசாலையிலும், கிறீஸ்தவ இல்லத்திலும் காணவிரும்புகிறேம். அவளது வீரவாழ்க்கைச்சரிதை துண்டுப்பிரசுரங்களிலும், புத்தகங்களிலும், நாடக மேடையிலும் பிரபல்யமடைவதாக. தன்னைச் சோதனைக்கு இழுத்த காதகனைநோக்கி அவள் உரைத்தவீராவேசமொழிகள் நமக்கு உணர்ச்சியூட்டுவதாக. — "*Mori potiusquam foedari*—பாவம்செய்வதை விடச் சாவதேமேல்" என்பதே. இந்தநாடகத்தை அரும்பிரயாசையுடன் அழகாகத் தமிழாக்கஞ் செய்த சங். சகோதரருக்குக் கத்தோலிக்கதமிழுலகம் என்றும் கடமைப்பாடுடையதாகும். நமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

புத்தக மதிப்புரை

## "தமிழ்த் தொண்டர்கள்"

ஆசிரியர்: எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ. தமிழ்ப்பேராசிரியர், சென் யோஜெவ் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. பதிப்பாசிரியர்: எம். இ. வீரபாகு. அச்சகம்: ஒற்றுமைநிலையம், 8, வியாசராவ்தெரு, தியாகராயநகர், மதராஸ்—17. பக்கம் 80 கொண்டது. விலை பிரதி ரூபா 1.

இஃது நம்தாய்மொழியாகிய தமிழ்மொழியின் முன்னேற்றத்திற்காக நம்முடைய தலைமுறையிலே அரும்பாடுபட்டுப் பணியாற்றியவர்களும், ஆற்றிவருகிறவர்களுமான தமிழ்த்தொண்டர்கள் இருபதின்மரின் அருந்தமிழ்ப்பணியைச் சுருக்கமாகவும், சிறப்பாகவும் எடுத்துக்கூறும் ஓர்அருமையான நூல். திரு. எம். ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்களால் எழுதப்பெற்றுக் கட்டுரைவாயிலாக அமைந்தஇந்நூலில் (1) விளக்கம்தந்த வித்தகர் டாக்டர் உ. வே. சாமிநாதஐயர் (2) தனித்தமிழ் மறவர் மறைமலைஅடிகள் (3) தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் (4) முற்றிப்பழுத்த மொழிநிபுணர் சுவாமி. ஞானப்பிரகாசர் (5) தமிழ்த்தவஞானி சுத்தானந்த பாரதியார் (6) மகிபாலன்பட்டி முதுபெரும்புலவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் (7) சிறுகதை ஆசிரியர் 'புதுமைப்பித்தன்' (8) திருவிளக்கேற்றியதீரர் சோமசுந்தர பாரதியார் (9) தேசியம்வழங்கிய தமிழ்வள்ளல் வ. உ. சிதம்பரம்பிள்ளை (10) புரிய எழுதிய பெரியஆசிரியர் விடுதலைவீரர் வ. ரா. (11) கவிச்சுவைதரும் கலைஅறிஞர் ரஸிகமணி டி. கே. சிதம்பரநாதமுதலியார் (12) கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை (13) யாழ்ஒலி இசைக்கத்தோன்றிய பேரொளி சுவாமி விபுலானந்தர் (14) சொல்லின்செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை (15) கவர்னர்ஜெனறல் தமிழ்முதறிஞர் சக்கரவர்த்தி இராஜகோபால ஆச்சாரியார் (16) தகைசான்ற தமிழ்த்தூதர் அறிஞர் தனிநாயகஅடிகள் (17) எண்பதாண்டுஇளைஞர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார் (18) பேச்சுக்கலைவீரர் கி. ஆ. பெ. விசுவநாதம் (19) அருவியில்மூழ்கிய எரிமலை வ. வே. சு. ஐயர் (20) சேவை வழங்கிய செல்வர் கா. சுப்பிரமணியபிள்ளை ஆகிய இருபதுதமிழ்த்தொண்டர்களைப்பற்றிய நினைவு மாலைகளும், அவர்களுடைய உருவப்படங்களும் அடங்கியுள்ளன. இவர்களும், இவர்கள்போன்ற ஏனையதொண்டர்களுமே தற்காலத் தமிழ்இலக்கியப் பூங்காவை அமைத்துக்காக்கும் அருங்கலைத் தொண்டர்கள். அதனுல் இவர்களது நூல்களை ஒவ்வோர்தமிழனும் படித்து இன்புறவேண்டும். இன்புறுவதோடு மாத்திரம்நில்லாது தமிழ்மொழியின் முன்னேற்றத்துக்காக ஆர்வத்துடன் உழைக்கவும் முன்வரவேண்டும். அத்தகையோருக்கு இந்நூல் ஓர்அருமையான முன்னேடியாகுமெனலாம். இதிலே "முற்றிப்பழுத்த மொழிநிபுணர் சுவாமி. ஞானப்பிரகாசர்" அவர்களைப்பற்றிய கட்டுரையை நம்பத்திரிகையின் இன்றைப்பிரசுரத்தில் அனுவதித்திருக்கின்றோம். நமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றிசாற்றுகின்றோம்.

THE JAFFNA APOTHECARIES COMPANY, JAFFNA

We have pleasure in announcing that the above business will be carried on as from 1st July, 1952 by the undersigned who are now the sole proprietors of the business.

(Sgd.) S. P. Nadarajah,
(Sgd.) P. S. Sittampalam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவாக்கு - திருவாக்கு

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

அந்தக்கொழும்புவீதியில் பிலிப்ஸ் ஓர் பைத்தியக்காரன்போல் கால்போன வழியே போய்க்கொண்டிருந்தான். சிந்தனைச்சுருள்கள்சில சுழன்றன. கள்ளமில்லாத வெள்ளைஉள்ளம் உருகத்தானேசெய்யும். சிலநிமிஷங்களாக வீதிவழியே நடந்துகொண்டிருந்த பிலிப்ஸ் நிமிர்ந்துபார்த்தான்.

"ஆம், அது சிலுவைதான். இதே சிலுவைதான் அன்று எங்கள் யேசுவின்தோளை வளைத்தது. இதே சிலுவைதான் அன்று யேசுவின் உயிரைப் பலிவாங்கியது. இதேசிலுவை ஏன் என்னையும் கொன்றுவிடக்கூடாது? ஆம், என்னையும் கொன்றுவிடட்டும்" என்று விறுவிறுப்புடன்நடந்தான்.

அப்போதுதான் அது மாதாகோவிலின் உச்சியிலிருக்கும் சிலுவையென அவனுக்குத்தோன்றிற்று. அந்தமாதாகோவிலுள் சென்றான். அங்கிருந்த சுரூபத்திற்குமுன்சென்று "மாதாவே! பக்தன்வந்திருக்கிறான் பணியாற்ற என்று பார்க்கிறாயா? உனக்குக் கருணைக்கண்ணில்லையா? கருணைகாட்டிய பழக்கமேயில்லையா? உன்னைப்பக்தியோடு பூசித்ததற்கு இதுவா பலன்? உன்னைநம்பி ஏமாந்தவர்களில் நானும் ஒருவன்! உன்னைநம்பி ஏமாந்தவர்கள் வரிசையிலே என்னுடையபெயரையும் எழுதிவிடு. என்னைஏமாற்றியதுபோல இன்னும் எத்தனை பேரை ஏமாற்றியிருப்பாய்? இதற்காகத்தானா உன்னைப்பக்தியோடு பூசிக்கிறார்கள்? இதற்காகவா இத்தனைபேரும் உன்காலடியில் மண்டியிட்டுக் கிடக்கிறார்கள்? உன்னைவழிபடும் அத்தனை பேரும் ஏமாந்த சோணகிரிகள் என்பதை இன்றே உணர்ந்தேன்! கஷ்டப்படும்போது கருணைகாட்டாத எம்மாதா? மாதா! ......" கண்ணீர் தாரைதாரையாக ஓடுகிறது.

"இந்தக்கண்ணீராவது உமது பாதங்களை நனைத்து என்பாவங்களைச் சுத்தப்படுத்தட்டும்." இவ்வாறு பேசிக்களைத்துப் பீடத்தின்முன் அயர்ந்துவிழுந்துவிட்டான். சிறிதுநேரங்கழித்து யாரோ கூப்பிடும் சத்தம்கேட்டு, 'யார்?" என்றான்.

"நான்தான் எழுப்புகின்றேன்; ஏன் இவ்விதம் இங்கே கிடக்கிறாய்?"

"நான் மாதாவாலும் கைவிடப்பட்ட துர்ப்பாக்கியன்" என்று கூறியபடியே கண்களைத்திறந்தான் பிலிப்ஸ்.

ஆம், அது அறியாதஉடையல்ல. எப்போதும் பார்த்துப்பார்த்துப் பழகிய உடைதான்.

அங்குசென்றிருந்த குருவானவர் "நீ யார்?"

மௌனம்.

"நீ யாரப்பா? ஏன் இங்கே கிடக்கிறாய்?"

"நான் எல்லோராலும் கைவிடப்பட்ட ஓர் அனாதை."

"மாதா தம்மைநம்பினோரை என்றும் கைவிடமாட்டா; இப்படிவா; நீசெய்த குற்றம் தானென்ன? அன்று கைகளை இழந்த ஞானசௌந்தரிக்குக் கைகொடுத்து உதவியமாதா, சூளைமத்தியிலே கன்னியர்களைக் காப்பாற்றிய மாதா, ஆழ்கடலிலே வேதசாட்சிகளுக்குப் புத்துயிர் அளித்தமாதா, இன்று உன்னையும் காப்பாற்றுவா. நீ எதுவிதகுற்றமும் செய்யவில்லையே!"

"ஆம், சிறுவயசுதொடக்கம் மாதாவைப் பக்தியோடு பூசித்தது குற்றம். வாழ வழிகாட்டுஎன்று இரந்துகேட்டது குற்றம். கலாசாலையில் கஷ்டப்பட்டுப்படித்து அரங்கேறியது குற்றம். இப்போது வேலையின்றிக் கஷ்டப்படுவது குற்றம். இன்னும் எத்தனையோ குற்றம் செய்திருப்பேன்" என்றான் பிலிப்ஸ் தனது கண்ணிரண்டும் கலங்க.

அப்போது குருவானவர் அவனைத் தமது இருகரங்களாலும்வாரியணைத்து, அவன் கண்களிலிருந்து வழிந்தோடிய கண்ணீரைத்துடைத்து "மகனே! உன்னை மாதா காப்பாற்றுவா; **இன்றைக்கு நீ பிச்சைக்காரனாக, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றிக் கஷ்டப்படலாம்; ஆனால், என்றோ ஒருகாலம் பணக்காரனாக— பெரிய உத்தியோகஸ்தனாக நீவாழ்வது வெள்ளிடைமலை"** என்று அன்புததும்பப் பெரிதும் உருக்கமாகக்கூறினார். எங்கும் ஓரே நிசப்தம்.

"என்னுடனே இருக்கலாம்; வேலைகிடைக்கும்வரை இங்கேயே இருக்கலாம்; திக்கற்றோருக்குத் தெய்வமே துணை; வழிதவறியோருக்கு வழிகாட்டுவதே எங்கள் கடமை" என்று மறுமுறையும் கூறினார் குருவானவர்.

மேரி அல்லும்பகலும் மகனைப்பற்றிய எண்ணமாகவே இருந்தாள். மகனுக்கு வேலைகிடைத்திருக்கும்; பணம் அனுப்புவான்; கடன்தீரும; எங்கள்வறுமையும் ஒழியும்; எங்கள் குடும்பத்தில் பணக்கஷ்டமே இனிக்கிடையாது என்று இப்படியாக மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தாள். ஆனால், மகனின் கடிதம் கண்டபிறகே அதெல்லாம் வெறும்பகற்கனவுஎனத் தோன்றிற்று.

அந்தக்குருவானவர் இரக்கமில்லாதவரா? அவர் சும்மா இருந்துவிடவில்லை. பல வேலைத்தலங்களுக்குஞ் சென்றார். குருவானவர் அல்லவா? கண்டதும் மரியாதைசெய்வார்கள். "ஒருவருக்கு வேலைகொடுப்பீர்களா?" என்றுகேட்டால் "தற்போது வேலையில்லை; இடம்வந்ததும் கட்டாயம் அறிவிக்கிறோம்" என்பார்கள். எங்கும் வேலைகிடைத்தபாடில்லை.

ஒருநாள் காலை 9 மணி இருக்கும். பூசைமுடிந்து சனங்கள் திரள்திரளாகச் சென்றுகொண்டிருந்தார்கள். பிலிப்ஸ் இமைவெட்டாது பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது தபால்காரன் சனங்களை விலத்திக்கொண்டு வந்து குருவானவரிடம் கடிதமொன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றான். உறையினின்றும் கடிதத்தை எடுத்து வாசித்துவிட்டு உதட்டில் புன்முறுவல் தவழப் பிலிப்ஸிடம் கொடுத்தார். அவன் அதை மரியாதையுடன் வாங்கிப்படித்தான். உடனே வேலையை ஏற்கும்படி எழுதியிருந்தது. அதுவும் சாதாரண வேலையல்ல. கந்தோரில் ஓர் மதிப்பானவேலை. ஓர்காலம் ஓர்மனிதனாக விளங்கக்கூடியவேலை. நேராக மாதாசுரூபத்தின்முன்சென்று "மாதாவே! நான் ஏதேதோவெல்லாம் பேசிவிட்டேன்; என்னை மன்னித்துவிடு" என்று பலமுறை வேண்டினான். அன்றே பிலிப்ஸ் வேலையை ஒப்புக்கொண்டான்.

இன்றுபிலிப்ஸ் தனதுஉத்தியோகதானத்தில் ஓர் உயர்ந்தஸ்தானம் வகித்திருக்கின்றான். சம்பளத்துக்குக் குறைவில்லை. செல்வசம்பத்துக்கும் குறைவில்லை. அவனது நேர்மையையும், சீரிய குணவிசேஷங்களையும் பற்றிப் புகழ்ந்துபேசாதவரில்லை. தினமும் மாலைவேளை அவன் தனதுஇல்லத்திலே பரிசுத்தலூர்துஅன்னையின் திருச்சுரூபத்தின்முன் தன்னுடைய அருமைப் பெற்றோர்சமேதராய்ச் செபமாலை சொல்லும்பொழுதெல்லாம் **"குருவாக்கு—திருவாக்கு"**என்பது அவன்மனக்கண்முன்பாக வந்துகொண்டிருக்கும். அந்தச்சுவாமியார் அன்று கூறிய மொழிகள் அவன்செவிகளில் இடையிடையே தொனித்துக்கொண்டிருக்கும். அப்போதெல்லாம் அவருக்காகவும் மாதாவைக் கையெடுத்துக்கொள்வான். சுபம்!

[கதையில் வரும் பெயர்கள் வெறும் கற்பனையே. அவைகள் எவரையும் குறிக்கவில்லை.]

## உங்களுக்குத் தெரியுமா?

1. ஒரேபிரசவத்தில் பிறந்து உலகில் அதிகம் வயதுசென்ற சகோதரிகளெனப் பிரஸ்தாபம் பெற்றுள்ள ஸ்திரீகள் மூவரும் எத்தேசத்தில் இருக்கின்றார்கள்?

அமெரிக்க ஐக்கியதேசத்தில் இருக்கின்றார்கள். இவர்கள் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம்என்று தங்களை அழைத்துக் கொள்ளுகின்றார்கள். ஆனால், இவர்களின் உண்மையான பெயர்கள்ஸ்ரீமதி அன்னி மைக்டனல், ஸ்ரீமதி நெல்லி டேனியல்ஸ், ஸ்ரீமதி நோறு மேர்பி என்பன. இவர்கள் தற்போது 84 வயதுடையவர்களாய் இருந்தபோதிலும் இன்னுரென்று பிரித்து இன்றைக்கும் அறியக்கூடாத வகையில் ஒரேசாங்க முள்ளவர்களாய் இருக்கின்றார்கள். சமீபத்திலே இவர்கள் நியூயோக்நகர் சென்றிருந்தபோது அந்நகர அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவரைச் சந்தித்து ஆசிபெற்றுத் திரும்பினார்கள்.

2. வத்திக்கான் இராச்சியத்து மூவித காவற்படைகளும் எவை?

(1) சுவிஸ் காவற்படை. (2) நோபிள் காவற்படை. (3) பலற்றின் காவற்படை.

3. பரிசுத்தபாப்பரசர் சாதாரண கத்தோலிக்கர் ஒருவருக்குச் சம்மானிக்கக்கூடிய அதிகம் உயர்ந்த மகிமை வரிசை யாது?

கிறீஸ்துநாதரின் மகிமைவரிசையே. (The Order of Christ)

4. பாப்பரசரின் அதிகார பதவிக்குரிய நாமவரிசை யாது?

பன்னிரண்டாம் பத்திநாதர், பரிசுத்த ரோமான்திருச்சபையின் பிரதம தலைவர், பூமியிலே கிறீஸ்துநாதரின் பதிலாளி, ரோமாபுரிமேற்றிராணியார், பரலோக திறவுகோல்களைக் கொண்டிருப்பவர். இன்னும் மேலைத்தேசங்களின் பத்திறியாக்கு, இத்தாலிய திருச்சபை அதிகாரி, ரோமைமாகாணத்தின் அதிமேற்றிராணியாரும், இராசதானிக்குரிய இராசகுரவரும், பரிசுத்த ரோமான்திருச்சபையின் உலகஇராச்சிய அரசராகவும் இருந்துவருகின்றார்.

5. குருடர்கள் படிப்பதற்கான பிறெய்லி எழுத்துமுறையைக் கண்டுபிடித்தவர் யார்?

ஒரு குருடரும், ஓர் பிரான்சிய கத்தோலிக்க ஆசிரியருமான லூயிஸ் பிறெய்லிஅவர்களே. இவர் குதிரைக் கலணைசெய்யும் கிராமவாசி ஒருவரின் புதல்வர். மூன்று பிராயமுடையவராய் இருக்கும்போது இவர் தமது தகப்பனாரின் ஆயுதங்களில்ஒன்று தற்செயலாகத் தம்முடையகண்ணில் குற்றியகாரணமாகப் பார்வையை இழந்துபோயினார். ஓர் இளம் வாலிபனாக இருக்கும்போதே இவர் குருடர்களின் பரோபகாரியென எக்காலத்துமே அறியப்படும்படியாகக் குருடர்கள் படிக்கத் தகுந்த நவீனமுறையைக் கண்டுபிடித்தார். அந்தமுறை அவருடைய நாமத்தையே கொண்டு "பிறெய்லி" எனத் தற்போது அறியப்படுகிறது. இந்தப் பிறெய்லி எழுத்துகளின்மூலம் உலக முழுவதிலுமுள்ள குருடர்கள் "பார்"க்கின்றார்கள். திரு. லூயிஸ் பிறெய்லி அவர்கள்பிறந்த நூற்றாண்டுவிழா இந்த ஆனிமாதம் உலகின் நானுபகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது.

6. "பரிசுத்த பிதா" என்று பாப்பரசர் ஏன் அழைக்கப்பெறுகின்றார்?

ஏனெனில், அவர் கடவுளின்ஞான மக்கள் சகலருக்கும் பிதாவாய்இருப்பதால் "பிதா" வென்றும், பரிசுத்தமானகருமங்களின் பிரதம பரிபாலனரென்ற தம்முடைய பதவிகாரணமாகப் "பரிசுத்த" என்றும் அழைக்கப்பெறுகின்றார். பாப்பரசரின் அதிகார பதவியானது அதிகபுனிதம் வாய்ந்ததாகும். ஏனெனில், பூமியிலே திருச்சபையின் பிரத்தியட்சதலைவர் அவரே. அதன் விசேஷித்த அடையாளங்களில் ஒன்று பரிசுத்தமாயிருப்பதாகும்.

## இஸ்பிரீ. ஆகமனத்தின் பின் 5-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(மத். 5 : 20—24)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கித் திருவுளம்பற்றினதாவது : வேதபாரகரும் பரிசேயரும் கொண்டிருக்கிற பரிசுத்ததனத்தைப் பார்க்கிலும் உங்கள் பரிசுத்ததனம் அதிகமாயிராவிட்டால், பரலோக இராச்சியத்திற்குட் பிரவேசிக்க மாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். கொலை செய்யாதிருப்பாயாக; கொலை செய்பவனேவென்றால் நியாயத் தீர்ப்புக்குப் பாத்திரவானயிருப்பானென்று முன்னோர்களுக்குச் சொல்லப்பட்டதாகக் கேட்டிருக்கிறீர்களே. ஆனால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் : தன் சகோதரனைக் கோபிக்கிற எவனும் நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரவானாகவும், தன் சகோதரனை ராக்கா (மூடன்) என்பவன் ஆலோசனைச்சங்கத் தீர்ப்புக்குப் பாத்திரவானாகவும், பைத்தியனே என்று சொல்பவன் நரகாக்கினிக்குப் பாத்திரவானாகவும் இருப்பான். ஆதலால், நீ பலி பீடத்தண்டையில் உன் காணிக்கையைச் செலுத்தும்போது, உன் சகோதரன் உன்மேல் ஏதோ மனத்தாங்கல் கொண்டிருக்கிறானென்று அங்கே நினைத்துக் கொள்வாயேயாகில், அவ்விடத்தில் பலிபீடத்துக்கு முன்பாக உன் காணிக்கையை வைத்துவிட்டு முந்த உன் சகோதரனோடு உறவாடப்போ; பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாய் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## கரவெட்டி மக்களின் பிரியாவிடை

"வண. எஸ். தியோகுப்பிள்ளை சுவாமியவர்கள் எங்கள்குருவாக மட்டுமன்றி, நண்பராகவும், வழிகாட்டியாகவும் விளங்கியிருந்து இன்று எமைப்பிரிந்து செல்வது நாம் ஈடுசெய்யமுடியாத நட்டம்" என்று கரவெட்டிக் கட்டளைக்குரவர் வண. எஸ். தியோகுப்பிள்ளை சுவாமிகளுக்கு நடந்த பிரிவுஉபசாரக் கூட்டத்தின்போது திரு. அகஸ்தீன் பொன்ராசன் குறிப்பிட்டார். கூட்டத்துக்குத் தலைமைவகித்த திரு இருதய தமிழ்ப்பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. விகோரி சின்னப்பு அவர்கள் குறிப்பிட்டதாவது : "சத்திய வேதத்தின் உண்மையையும், மகத்துவத்தையும் நம் நாட்டவாறியச் சங்கநாதம் எழுப்பி நம்மிடையே ஒற்றுமையையும், பரஸ்பரஅன்பையும் நிலவச் செய்தபெருமை வண. சுவாமி அவர்களுக்கே உரியதென்பதை நாம் மறக்கவும், மறுக்கவும முடியாது." மேலும், திருவாளர்கள் எஸ். பொன்னையா, சேனாதிராசா, எஸ். மரியாம்பிள்ளை இராசா ஆதியோரும் பேசினார்கள்.

பி. திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

அன்புச் சோதரங்களே !

நீங்கள் எல்லாரும் களைத்துப்போய் இருக்கிறீர்கள்போல் தோற்றுகிறது. என்ன காரணம் ?

அண்ணை, தெரியாதது மாதிரிக் கதைக்கிறூர். நாங்கள் மருதமடுவுக்குப் போய்விட்டல்லோ வந்திருக்கிறேம்.

ஆம், மெய்தான் ! அங்கே என்ன செய்தீர்கள் ?

நாங்களா ? நாங்கள் றெயின்வண்டியில் ஏறி மடுறேட்டுக்குப் போனேம். அப்பாடா ! என்ன சனநெருக்கம் ! கிழங்கு அடுக்கின மாதிரிதான் றெயின்பெட்டிகளுள் அடைபட்டுக் கிடந்தோம். ஆனல், எங்களுக்கு வாசி. பெரியஆட்கள் எல்லாரும் நின்றநிலை. நாங்கள் நல்ல நித்திரை.

அப்படியே நெருங்கி நசிந்து மடுவுக்குப்போய் விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதன் பிறகு ?

அதற்குப்பிறகு, கோயிலடியிலே இறங்கி மெழுகுதிரி வாங்கிக்கொண்டு, "கியு" வரிசையில் நின்று மாதாவின் சந்நிதானத்தை அடைந்து, கொஞ்சநேரம் செபித்து மெழுகுதிரியையும் கொளுத்திவிட்டு, விடுதிக்கு இடந்தேடிப் போனேம். நல்லவேளையாகக் கொழும்பிலிருந்து மாமாவீட்டார் வந்திருந்தார்கள். அவர்கள் இருந்த விடுதியைக் குலைத்து, அகட்டிக்கட்டி அதிலே மூன்று நாட்களாய்க் குடிபதியாய்த் தங்கிவிட்டோம்.

வேறென்ன செய்தீர்கள் ?

நானும், அப்பாவும் தண்ணீர் கொண்டுவரப் போனேம். அம்மாவும், அக்காவும் சட்டிபானை வாங்கப்போனுர்கள். அதற்குப்பிறகு........

அதுகளெல்லாம் தெரியும் ; யாத்திரை என்று போனீர்களே, அது என்னமாதிரி முடிந்தது ?

நன்ருய் முடிந்தது அண்ணை ! பூசைகாண ஒரே நெருக்கம். என்றூலும் ஒவ்வொருநாளும் இரண்டுபூசை கண்டோம். நான் பூசைக்கு உதவினேன். அதற்குப்பிறகு 9 மணிக்குச் செபமாலை. சுவாமியார் விளங்கப்படுத்த, நாங்கள் செபஞ் செய்தோம். பின்னேரம் 3 மணிக்குத் தேவநற்கருணைச் சந்திப்பும், செபமாலையும். அண்ணை ! அங்கே இரண்டு சுவாமிமார் உயர்ந்த மேடையில் நின்று, ஏதோ தர்க்கம் பண்ணிக்கொண்டு நின்ருர்கள், பூசைப்பலி, இரட்சணியம், உண்மையானவேதம் என்று கனக்க. அதுக்குப்பிறகு பொழுதுபட, கோயில் முன்றிலில் செபமாலை, பிரசங்கம், வேஸ்பர், ஆசீர்வாதம்.

மெத்த நல்லது. இன்று சற்றுஇளைப்பாறிப் பயணக் களைப்பை ஆற்றவேண்டும். நாளைக்கு யாருடைய திருநாள் ?

அண்ணை ! நான் சொல்லட்டா, எங்களுக்குச் சிஸ்றர் சொல்லித் தந்தவ. மரிய கொறெற்றியுடைய திருநாள்.

அது யார் ? அவவைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும் ?

அவவைத்தான் அலக்சாந்திரோ கிறிசால் குத்திக் கொன்றூராம். அவர் மனந்திரும்பி விட்டாராம். இப்போ ஒரு சந்நியாச மடத்திலிருந்து தவஞ் செய்கிறூராம்.

என்ன நடந்தது ? ஒழுங்காய்ச் சொல்லுங்களேன்.

அது என்னெனன்றூல், மரியா கொறெற்றி ஒரு ஏழை. தகப்பன் இல்லை. தாய் ஒருவனுடைய கமத்திலே வேலைசெய்து வந்தாள். மரியாவுக்கு அப்பொழுது வயது 12. அந்தக் கமக்காரனுடைய மகன் பொல்லாத தூர்த்தன். அவன்தான் அலக்சாந்திரோ. மரியாளைத் தன்னுடன் பாவத்துக்கு உடன்படும்படி கேட்டான். மரியாள் மறுத்தாள். "அது சருவேசுரனுக்கு ஏராத துரோகம்" என்று சொல்லி அநட்டிவிட்டாள். அதினுல் அவன் கோபங்கொண்டு அவளைத் தாறுமாருகக் குற்றிப் போட்டான். மரியா வைத்தியசாலையில் இறந்தாள். இறக்குமுன் அலக்சாந்திரோவுக்கு மன்னிப்புக் கொடுத்தாள். அவனை மோட்சத்திற் சேர்க்க மன்ருடுவதாகவும் வாக்குப் பண்ணினுள் அவவுக்கு இப்பொழுது நம்மை ஆளும் 12-ம் பத்திநாதர் அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூட்டி : அர்ச். மரியா கொறெற்றி தற்காலத்துப் பிள்ளைகளுக்கும், வாலிபருக்கும் ஓர் மேல்வரிச் சட்டமென்றூர் ; அவவைப் பின்பற்றிப் பரிசுத்த கற்பென்னும் புண்ணியத்தை அனுசரிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்து, தேவ திரவிய அனுமானங்களைக் கைக்கொண்டு, பாவச்சமையங்களை அறவே விலக்கி, தேவதாயாருடைய உதவியுடன் பரிசுத்தமாய் நடக்கும்படி எங்கள் எல்லோரையும் அழைத்திருக்கிறூர்.

## இவர் யார் தெரியுமா ?

ஒரு சிறு ஸ்பானிய பையன் தன்னுல் கூடியமட்டும் கல்வி பயின்றும் பயனற்றதாகத் தோன்றியதால் மனந்தளர்ந்து பாடசாலையைவிட்டுக் காட்டிற்கு ஓடினுன். பல இடங்களிலும் திரிந்தான். வெயிலின் அகோரத்தால் களைத்து ஓர் நீரோடையின் பக்கமாக நிழலில் படுத்திருந்தான். அருகில் அந்த நீர் ஓடையில் ஓர் சிறு நீர்வீழ்ச்சி இருந்தது. சிறிது தூரத்திலிருந்து நீர் விழுவதைக் கவனித்தான். விழும் இடத்தில் இருந்த கற்பாறையின் சிறு குழியையும் நோக்கினுன். இப்படி இச்சொற்ப நீர் இடைவிடாமல் விழுந்ததினுல் அல்லவா, இக்கற்பாறையையும் தேய்த்துக் குழி உண்டாக்கியது. அதுபோலவே நானும் இடைவிடாமல் படித்தால் படிப்பாளி ஆவது நிச்சயம் என்று சிந்தித்தான். அப்படியே திரும்பிக் கலாசாலை சென்ருன். கல்வி கற்றுத் தேர்ந்தான். இவர்தான் பெரிய அர்ச்சியசிஷ்டரும், வேதபாரகராகச் திருச்சபையால் கொண்டாடப்பெறுகிறவருமான அர்ச். செவில் இசிதோர். ஆகையால் சிறுவர், சிறுமிகளாகிய நாங்களும் விடாமுயற்சியுடன் படித்தால் வெற்றி அடைவோம்.

'முயற்சி உயர்ச்சி தரும்'', "ஊக்கமது கை விடேல்''

S. S.

## வேண்டும்

அன்பு வேண்டும் இறைவனில்
ஆசை வேண்டும் தமிழினில்
இரக்கம் வேண்டும் ஏழையில்
ஈகை வேண்டும் பொருளினில்
உண்மை வேண்டும் உரையினில்
ஊக்கம் வேண்டும் முயற்சியில்
எளிமை வேண்டும் வாழ்வினில்
ஏற்றம் வேண்டும் கல்வியில்
ஐக்கியம் வேண்டும் உலகினில்
ஒழுக்கம் வேண்டும் நடையினில்
ஓய்வு வேண்டும் முதுமையில்
ஔடதம் வேண்டும் பிணியினில்

## பாடிக்கொண்டே துயில் எழுவாய்!

1. 'கா' 'கா' என்றே ஒலிசெய்து
காலை எழும்பும் காகம்போல்
பாப்பா நீயும் ஆண்டவனைப்
பாடிக்கொண்டே துயில்எழுவாய்.

2. பச்சைக் கிளியைப் போலே நீ
படிக்கும் கவனம் வைபாப்பா
இச்சை தீரப் பழங்களையும்
என்றும் புசிக்கப் பழகிடுவாய்.

3. 'கூ' 'கூ' என்றே கூவிவரும்
குயிலின் இசையா லே பொங்கும்
பாலைப் போலுங் தமிழ்க் கீதம்
பாடல் வேண்டும் பாப்பா நீ.

4. தோகை விரித்தே மயிலாடும்
தோற்றங் கண்டு மகிழ்வாயே
ஆசை கொண்டே மயிலைப்போல்
அழகாய் நடனங் கற்றிடுவாய்.

5. வாதும், சூதும் அறியாத
வண்ணப் புருவின் குஞ்சைப்போல்
நீயும் வாழ்ந்திடு வாய்பாப்பா
நிறைந்த இன்பம் பெற்றிடுவாய்.

"ஜெயம்''

## முத்துப் பை

ஓர் முறை வனந்திரத்தின் வழியாய்ப் பிரயாணஞ் செய்த ஓர் அராபியன் வழிதவறி அலைந்தான். அவன் தன்னேடு எடுத்துச் சென்ற ஆகாரம் எல்லாம் முடிந்துபோக, இரண்டுநாள் இரவும் பகலும் சாப்பிட ஒன்றும் கிடையாது வருந்தினுன். வனந்திரத்திலே பசியால் வாடிச் சாகவேண்டி வருமோ என்றபயம் அவனுக்கு உண்டாயிற்று. ஆகவே, வனந்திரத்தின் வழியாகச் செல்லும் வியாபாரிகள், பிரயாணிகள் யாராவது வரமாட்டார்களா ? என்ற அங்கலாய்ப்புடன் பாலைவனம் முழுதும் பசியோடு தவித்துச் சென்று கொண்டிருந்தான்.

கடைசியாக, களைத்துத் தவித்து ஒரு இடத்தில் கொஞ்சம் தண்ணீர் இருந்த ஓர் கிணற்றைக் கண்ணுற்று அங்கு போனுன். அந்தக் கிணற்றைச் சுற்றிப் பிரயாணிகள் தங்கியிருந்து போன அடையாளம் காணப்பட்டது.

பசியின் கொடுமையால் தவித்த இந்த அராபியன், பிரயாணிகள் ஏதாவது விட்டுப் போயிருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு சுற்று முற்றும் தேடிப் பார்த்தான். அப்போது அங்கு ஓர் இடத்தில் கிடந்த ஓர் சிறு பையைக் கண்டெடுத்தான்.

அதன் வாய்ப்பக்கம் இறுகக் கட்டப்பட்டு அதனுள் கடினமும், உருண்டையுமான ஏதோ பொருட்கள் இருப்பதாகக் காணப்பட்டது. அவன் அந்தப் பைக்குள்ளே வனந்திரத்தில்கிடைக்கும் பேரீச்சம்பழம் ஏதாவது இருக்கலாம் ; அதைத் தின்று பசியைத் தீர்த்துக் கொள்ளலாம் என எண்ணி, ஆவலோடு அந்தப் பையைத் திறந்து பார்த்தான். ஏமாற்றம் அடைந்தான். காரணம் என்ன? அவனது பசியைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஆகாரத்திற்குப் பதிலாக, அதில் நிறைய விலை உயர்ந்த முத்துக்கள் இருந்தன. அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாகி : ஐயோ ! எனது பசியைத் தீர்க்க வழியில்லாத இந்த முத்துகள் இருந்து என்ன பிரயோசனம் என்று அந்த முத்துப் பையைத் தூரவீசி எறிந்துவிட்டு, அந்த இடத்தில் தானே விழுந்து இறந்தான்.

—ஆ. திரேஸ்

—மேற்குஐரோப்பிய நாடுகளில் அடங்கியுள்ள சுமார் 20 கோடி மக்களாலும் ஒன்றுசேர்ந்து தெரிவு செய்யப்பட்டு உலகசரித்திரத்தில் உண்மையாகவே முதலாவதாய் இருக்கப் போகும் ஐரோப்பிய பாராளுமன்றத்தை ஆக்குவதான ஓர் இயக்கத்தில் பிரான்சிய அரசாங்கம் இம்மாசத்திலே ஈடுபடவிருக்கின்றது.

—யப்பானுக்குப் பாப்பரசரின் முதலாவது ஸ்தானீகராய் நியமனம்பெற்ற பேர்ஸ்ரென்பேர்க் அதிமேற்றிராணியார் தமது நியமனஅதிகார பத்திரங்களைச் சமீபத்திலே ஹிறேஹிற்றோ சக்கிரவர்த்தியிடம் சமர்ப்பிக்கச்சென்றபோது, அவரால் தமக்கு அனுப்பிவைக்கப்பெற்ற இராசரதத்தில் அமர்ந்து மாளிகைபோய்ச் சேரலாயினர். அப்போது குதிரைப்படைஒன்றும், மோட்டர் பொலிஸ்படைஒன்றும் பரிவாரமாக அவரைப் புடைசூழ்ந்துசென்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## என்ன நியாயத்தின்பேரில்...

— வாஷிங்ரன்

கோறிய யுத்தகைதிகள் பிரச்சினையானது, 2-வது மகாயுத்தத்துக்குப் பிறகு இரும்புத்திரைக்குப்பின்னல் மாயமாய் மறைந்துபோன இரண்டுலட்சத்துக்குமேற்பட்ட கைதிகளைப்பற்றிய பிரச்சினையைக் கிளப்புகிறது. அமெரிக்கசெனற்றர் பெர்குஸன்அவர்கள் "அமெரிக்க குரல்" வானொலியிலே "என்னநியாயத்தின்பேரில் யுத்தகைதிகளைப்பற்றிச் சோவியற்அரசு துணிந்து பேசுகிறது?" என்று கேட்டிருக்கின்றார்.

கோறியாவிலே ஐ. நா. படைகளிடம்பிடிபட்ட 1,70,000 கைதிகளில் 1,00,000 பேர் கம்யூனிஸ்தஆட்சிக்குத் திரும்பமுடியாதுஎன்று மறுத்துவிட்டனர். இதைஅவர் சுட்டிக்காட்டினார். இந்தக்கைதிகளின்குரல் உலகெங்கும் கேட்டிருக்கிறது. ஆனல், சோவியற்நாட்டில் ஊமையாக்கப்பட்டுள்ள எண்ணற்ற யுத்தகைதிகளின் குரலைப் பலகாலமாகக் கேட்கவேமுடியவில்லை. அவர்கள் தங்கள்விருப்பத்தை வாய்திறந்துசொல்ல வழியின்றித்தவிக்கிறார்கள்" என்று செனற்றர் பெர்குஸன் ஞாபகம்ஊட்டினார். அவர்மேலும் கூறியதாவது:

"சோவியற்நாட்டில் சிறைப்பட்ட யுத்தகைதிகளிற்பலர் அடிமைத்தொழில் முகாம்களில் மாண்டுபோய்விட்டாலும், மீதியானவர்கள் உயிரோடிருக்கவேண்டும். அவர்கள் எங்கே? அவர்களின்கதி என்னவாயிற்று? ஏற்கனவே சோவியற்அரசு இவ்வளவு உயிர்களைப் பயங்கரவதையில் ஆழ்த்திவிட்டிருக்கிறது. இப்போது அது இன்னும் ஒருலட்சம் உயிர்களைப் (கோறியயுத்தகைதிகள்) பலிகேட்கிறது. ஆனல், உலகத்துக்கு ஞாபகசக்திஇருக்கிறது. சுயேச்சை உலக மக்கள்சார்பில் ஐ. நா. ஸ்தாபனம் தனதுஎண்ணத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. கம்யூனிஸ்தகொடுங்கோலுக்கு ஐ. நா. ஸ்தாபனம் இனிமேல்புதிதாக ஒருஉயிரைக்கூடப் பலிகொடுக்காது. சுதந்திரம்நாடுகிற மக்களை ஐ. நா. ஸ்தாபனம் கைவிடாது."

இரும்புத்திரைக்குள் என்னவாயினரோ என்பதுதெரியாமல் இருப்பவர்களின் விபரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஜேர்மனியர் | ... | 12,85,494 |
| ஜப்பானியர் | ... | 3,70,000 |
| ஹங்கேரியர் | ... | 2,00,000 |
| ருமேனியர் | ... | 1,80,000 |
| இத்தாலியர் | ... | 63,000 |

மேற்கண்ட புள்ளிவிவரங்களைச் செனற்றர் பெர்குஸன் தொகுத்துரைத்தார். "இவ்வளவுபேர்களைப் பயங்கர காராக்கிருகத்தில் அடைத்துவைத்துக்கொண்டு தென்கோறியாவில் உள்ள யுத்தகைதிகளைத் தங்களிடம் ஒப்படைக்கும்படிகேட்கக் கம்யூனிஸ்தர்களுக்கு என்னநெஞ்சுத்துணிவு?" என்றும் அவர்கேட்டனர். கோறியாவில் ஐ. நா. வசமுள்ள யுத்தகைதிகள் உணவு, மருந்துவிஷயங்களில் குறையறப் பராமரிக்கப்பட்டு வருவதாகத் தாம் நேரிற்கண்டறிந்ததையும் அவர் விபரித்தார்.

## அமைதிக்கு அடிகோலவல்லது

—ஐ. நா. ஸ்தா. நியூயோக்

உலகசமாதானத்தைச் சாதிப்பதற்கு ஐக்கியநாடுகள்ஸ்தாபனம் வகிக்கின்ற ஒப்பற்றநிலைமையை ஐ. நா. தர்மசாசன கையொப்பவைபவத்தின் ஏழாவதுஆண்டு நிறைவுநாளான ஆனி 26-ந் திகதியையொட்டி வெளியாகியுள்ள அறிக்கைகள் வற்புறுத்துகின்றன. அகிலஉலக ஸ்தாபனமாகவிளங்கும் ஐ. நா. ஸ்தாபன ஆதிகர்த்தாக்களில் முக்கியமானஒருவராகிய அமெரிக்க மாஜி வெளிநாட்டுமந்திரி கார்டல் ஹல் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

"இடுக்கண்கள்பற்பல நேரிட்டபோதினும், உலகசமாதானம்என்கிற உன்னதலட்சியத்தைநோக்கி ஐ. நா. ஸ்தாபனமானது கடந்தஏழுஆண்டுகளில் அமைதியாக முன்னேறிவந்திருக்கிறது. சர்வதேச சமாதானத்துக்கும், உறுதிப்பாட்டுக்கும் அதுஏற்கனவேயே கணிசமாகஉதவியுள்ளது. என்னவானாலும், சமாதானத்தைச் சாதிப்பதுஎன்பது இடையறாதுநடக்கவேண்டிய ஒருகாரியமாகும். தினந்தோறும், ஆண்டுதோறும் அந்தக்காரியத்தில் கவனம்செலுத்த வேண்டியதாகும்.

"இந்த ஆண்டு நிறைவுநாளன்று உலகமக்கள்எல்லாரும் சமாதானம், விடுதலை, நீதி, பந்தோபஸ்துஆகிய லட்சியங்கள்நிறைவேற இடைவிடாமல் பாடுபடுவதாக மீண்டும்பிரதிக்கினை எடுத்துக்கொள்வார்களாக. ஐ. நா. தர்மசாசனத்தில் உன்னதலட்சியங்களை வகுத்துக்கொண்டு அவற்றைச் சாதிக்கும் மார்க்கத்திலே உருப்படியானமுன்னேற்றமும் கண்டபெருமை இந்தச்சந்ததிக்குச் சேருவதாகஇருக்கட்டும்."

## அடிமை வேலைக்கு...

—ஐ. நா. ஸ்தா. நியூயோக்

கம்யூனிஸ்த ஐந்துவருடத் திட்டம் ஒன்று புதிதாக 6,50,000 பேர்களை அடிமைவேலைக்குத் திரட்டுமாறு ஆணைசெய்திருக்கிறது என்றதகவல் இப்போது நிர்ப்பந்தவேலைமுறைபற்றி விசாரணைநடத்தும் ஐ. நா. கமிற்றிக்குக் கிடைத்துள்ளது. இத்தகவலை வெளியிட்டவர், கமிற்றியின்முன்னிலையில் சாட்சியம்அளித்த மாஜி ஹங்கேரிய பாராளுமன்றஅக்கிராசனர் பெலா வார்கா அவர்கள்.

யப்பானிய, ஜேர்மன் யுத்தக்கைதிகளை "யுத்தகுற்றவாளிகள்" என்று தாங்களாகவே தீர்மானித்துக்கொண்டு அவர்களை அடிமைத்தொழிலாளிகளாக்கிச் சோவியற்அரசு வேலைவாங்குகிறது என்று கமிற்றியிடம்சாட்சியமளித்த அமெரிக்க தொழிற்சமஷ்டி உபஅக்கிராசனர் மத்தியூ வோல் அவர்கள் கூறினார். அவர் மேலும் தெரிவித்தவிவரங்களாவன:

(1) கம்யூனிஸ்தசீனவிடம் ஏற்கனவேயே பத்துலட்சத்துக்குமேற்பட்ட அடிமைத்தொழிலாளர்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

(2) சோவியற்நாட்டிலும், சீனவிலும்மட்டும் அல்லாமல் கிழக்குஐரோப்பிய சோவியற்சார்புநாடுகளிலும் அடிமைத்தொழிலாளரைத் திரட்டும்நடவடிக்கை கூடிவருகிறது.

பத்துலட்சத்துக்குமேற்பட்ட ஆண்களும், பெண்களும் அடிமைத்தொழிலாளிகளாகச் சோவியற்நாட்டுக்கு ருமேனியா, போலாந்து, செக்கோசிலவாகிய, ஹங்கேரிய, பல்கேரிய கம்யூனிஸ்த அரசாங்கங்களினல் கடத்தப்பட்டிருக்கின்றனர் என்பதற்கும் எழுத்துமூலமான ஆதாரம் கமிற்றிக்குக் கிடைத்திருக்கிறது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த பாத்திமா அன்னையினதும், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். அந்தோனியார், அர்ச். சவேரியார், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களினதும் மன்றாட்டினல் நான்கேட்டகாரியம் இனிதுசித்தியானது.

பேர்போட விரும்பாதவர்

## அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார் மரித்த நான்காம் நூற்றாண்டு விழா

தோட்டவெளியில் இம்மாதம் 12-ந்திகதி சனிக்கிழமை மாலைஆராதனையுடனும், 13-ந் திகதி பாடற்பூசையுடனும்பரதகுலக்கிறீஸ்தவர்களால் கொண்டாடப்படும்.

13-ந் திகதி இரவு "இரு சகோதரர்" என்ற நன்மை பயக்கும் நாடகம் ஒன்று பேசாலை வாலிபர்கள் நடிப்பார்கள்.

கட்டளைக்குரவர்
பேசாலை

## ஆரோக்கியமாதா ஆண்கள் பத்திச்சபை
### அக்கரைப்பற்று

இப்பத்திச்சபையாரின் கூட்டம் 29-6-52 ஞாயிறுவாரம் பரிபாலகர் வண. ஹொட்விறி குக்சுவாமியவர்கள் தலைமையில்கூடியது. காரியதரிசியால் சென்றகூட்டவரலாறு வாசித்து ஏற்றுக்கொள்ளப் பட்டதுடன் பத்திச்சபையாரின் 8-வதுவருடாந்த மகாநாட்டில் நிறைவேறிய பின்வரும் பிரேரணைகளை இச்சபை ஏற்றுக்கொண்டது.

1. பத்திச்சபையார் ஒவ்வொரு சனிக்கிழமையும் திவ்விய பலிபூசை கண்டு தேவநற்கருணை உட்கொள்ளல்.
2. இதை மேற்பார்வைசெய்யவும், ஏனையகத்தோலிக்கரையும் இக்கைங்கிர்யத்தில் ஈடுபடச்செய்யவும் ஒரு சிறு சபையைத் தங்களுக்குள் ஏற்படுத்துதல்.
3. சபையாருக்கயலிலுள்ள ஏழைகளுக்கு உதவிபுரிதல்.
4. "சத்தியவேத பாதுகாவலன்," ஆங்கில "மெசஞ்சர்" பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்தல்.

இத்துடன் கூட்டம் செபத்துடன் இனிதுமுடிவுற்றது.

S. வயந்தராசபிள்ளை
காரியதரிசி

## WANTED

Wanted from the 1st of August, 1952 an experienced Chief Clerk for the Northern Division Agricultural Producers' Co-operative Union Ltd., Jaffna. Minimum Educational Qualification required is English S. S. C. or its equivalent.

Salary Rs. 120/- — Rs. 250/-

Rs. 10 x 13.

The selected candidate will be required to give a Cash Security of Rs. 1,000/- or he should furnish a Fidelity Guarantee Policy for Rs. 5,000/-.

Applications close on 18-7-52.

**J. C. Amarasingham,**
Honorary Secretary.
The Northern Division Agricultural Producers' Co-operative Union Ltd.

Jaffna, 30-6-1952.


## சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.


## 2-ம் வருட மரணஞாபகம்



பிறப்பு: 25—12—27 இறப்பு: 5—7—50

எனதுஅருமைக்குமாரர் திரு. இம்மனுவல் துரைரத்தினம் செல்வத்துரை அவர்கள் மறைந்து இன்றோடு (5-7-52) இருஆண்டுகள் நிறைவாகின்றன.

பாவிபயந்த மணியெட் டிலேயோவெம்
ஆவித் திரையன ணைந்திட்டால்—பூவில்
திறவோ ரறவோருற் றுரைக்கெஞ்
—சிற்றேம்
மறவா திதவு மவற்கு

இதனைக்கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க்கேட்டுக்கொள்ளுகிறோம்.

நித்தியஇளைப்பற்றியை அவருக்குக் கொடுத்தருளும் சுவாமி...சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவர்பிரிவால் துயருறும்
தாய்: ஸ்ரீமதி. மு. செல்வத்துரை.
பாரியார்: ஸ்ரீமதி. செ. துரைரத்தினம்.
சகோதரர்கள்: இராசரத்தினம், நாகரத்தினம், தம்பிரத்தினம், சங். சிஸ்றர் மேரிலூமின (நேசரத்தினம்), தங்கரத்தினம், யோகரத்தினம், அரியரத்தினம், சண்முகரத்தினம்.

R. I. P.

## மரணசங்கதி

மிருசுவில் வாசரும், வியாபாரியாரும், பலவருடகாலமாகப் பாதுகாவலன் பத்திரிகைச் சந்தாதாரருள் ஒருவருமான மத்தியாஸ் எற்வேட் தம்பிஐயா என்பவர் அநேகமாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து எவ்விதவைத்தியங்களினலும், இருசத்திரசிகிச்சைகளாலும்முதலாய் எதுவிதகுணமுமடையாது சென்ற 13-6-52 வெள்ளிக்கிழமைகாலை 5 மணியளவில் தமது ஆன்மாவைப் படைத்தோன்கரங்களில் ஒப்புவித்து மரணத்திரையில் மறையலானார். மரணிக்கும்போது இவருக்கு வயது 52. இவருக்கு மூன்றுபுத்திரரும், மூன்றுபுத்திரிகளும், ஓர்சகோதரியும்உளர். அழகியபேழையில் வைக்கப்பட்டிருந்த இவருடையபிரேதமானது மறுநாள் 14-6-52 சனிக்கிழமைகாலை வெண்பரிபூட்டிய ரதமொன்றினில் அமர்த்தப்பட்டு வண. ஜே. வேதநாயகம்சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடி முன்செல்லச் சேமக்காலைகொண்டுசென்று சுவாமியார் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க அநேகரின் துக்கபிரலாபங்களின் மத்தியில் பூமதானம்செய்யப்பட்டது. இவரை இழந்து கவலையில்ஆழ்ந்திருக்கும் புத்திரர் புத்திரிகளோடும், அரியசகோதரியோடும், மருமக்களோடும் நானும் அனுதாபப்படுகின்றேன். இதைக்கண்ணுறும் விசுவாசிகள் இவரதுஆன்மசாந்திக்குத் துணைபுரிவார்களாக!

R. I. P. —கடிதர்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 3-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org